ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

(*All Rights Reserved.*)

| தொகுதி | நள௵ மாசி௴ 1௳ | பகுதி |
|---|---|---|
| 2 | 1917-ம் ௵ பிப்ரவரி௴ 12௳ | 8 |

## கடவுள் வணக்கம்

---

*தன்னை யொருவர்க் கறிவரிதாய்த்*
*தானே தானா யெங்குநிறைந்*
*துன்னற் கரிய பரவெளியா*
*யுலவா வமுதா யொளிவிளக்காய்*
*என்னுட் கலந்தா யானறியா*
*திருந்தா யிறைவா வினியேனும்*
*நின்னைப் பெறுமா றெனக்கருளா*
*நிலையைக் கொடுக்க நினையாயோ.*

---

*நினையு நினைவுக் கெட்டாத*
*நெறிபெற் றுணர்ந்த நெறியாளர்*
*வினையைக் கரைக்கும் பரமவின்ப*
*வெள்ளப் பெருக்கே நினதருளால்*
*மனைவி புதல்வ ரன்னைபிதா*
*மாடு வீடென் றிடுமயக்கம்*
*தனையு மறந்திங் குனைமறவாத்*
*தன்மை வருமோ தமியேற்கே.*

---

*வரும்போ மென்னு மிருநிலைமை*
*மன்னா தொருதன் மைத்தாகிக்*
*கரும்போ தேனோ முக்கனியோ*
*வென்ன வென்னுட் கலந்துநலம்*
*தரும்பே ரின்பப் பொருளேநின்*
*றன்னை நினைந்து நெக்குருகேன்*
*இரும்போ கல்லோ மரமோவென்*
*னிதய மியாதென் றறியேனே.*

# ஆனந்த போதினி

ஙளஹ௯ மாசி௴ 1௨


## ஒற்றுமை

ஒற்றுமையென்பது ஜனசமுகத்தின் க்ஷேமத்திற்கும் அபிவிர்த்திக்கும் இன்றியமையாததாகும். மானிடப்பிறவி சிறந்ததென்பதற்கு அதுதக்க அத்தாட்சி. மனிதர்க்கு ஆறுவது அறிவாகிய பகுத்தறிவு இருப்பதால் அவர்கள் சமயம் நேரும்போது சுயநலத்தைக் கருதாமல் பொதுநல நோக்கங்கொண்டு ஒருமனப்பட்டு ஒருகாரியத்தைச் சாதிக்கிறார்கள். ஒரு குடும்பத்திலுள்ள தாய்தந்தையர் சகோதர சகோதரிகள் யாவரும் மனவொற்றுமையோடு வாழ்ந்துவந்தால் அக்குடும்பம் க்ஷேமத்தை யடைவதோடு அன்னியரும் அதைக் கௌரவமாய் மதிக்கிறார்கள். அதைவிட்டு அக்குடும்பத்தினர் பொறுமையின்றி ஒருவர்மேலொருவர் புறங்கூறவும், குறைகூறவும் தொடங்கி ஒற்றுமையை இழந்துவிட்டாலோ அக்குடும்பத்தின் க்ஷேமம் குன்றத் தொடங்குவதோடு அன்னியரும் அக்குடும்பத்தினரை அவமதிக்கத் தொடங்கிவிடுவார்கள்.

அதைப்போலவே ஒருதேசத்திலுள்ள பலவகைப்பட்ட ஜனங்களும் தேசக்ஷேமத்தைக்கருதி ஒற்றுமையாய் நடந்தால்தான் அத்தேசம் க்ஷேமப்படும். அன்னியநாட்டாரும் அத்தேசத்தாரை மரியாதையாய் நடத்துவார்கள். நமதுநாட்டில் பலஜாதிகளாகவும் பலமதங்களாகவும் பலபாஷைகளாகவும் இருப்பதால் நாம் ஒருபோதும் ஒற்றுமை யடையமாட்டோமென்று சிலர் கூறுகிறார்கள். அது ஒப்பத்தக்கதல்ல. ஜாதிபேத மதபேதங்களும் உயர்வு தாழ்வாகிய அந்தஸ்தின் பேதங்களும் பாஷாபேதங்களும் நமது நாட்டிலிருப்பதுபோலவே "நாங்களனைவரும் ஒரேஜாதி ஒரேமதம்" என்று கூறிக்கொள்ளும் தேசங்களிலுமிருக்கின்றனவேயன்றி இல்லாமலில்லை. ஆனால் நமது நாட்டில் வெளிப்பாட்டிலும் அனுபவத்திலுமிருக்கிறது. மற்ற நாடுகளில் வெளிப்பாட்டில் இல்லாமல் அனுபவத்தில்மட்டும் இருக்கிறது. இரண்டுமொன்றே. அன்னிய

தேசங்களில் அவ்விதபேதங்களால் எவ்வளவோ கலகங்களும் அனர்த்தங்களும் நேர்ந்திருக்கின்றனவென்பது சரித்திரங்களால் நன்கு விளங்குகிறது.

நமது நாட்டில் பூர்வீகமுதலே இப்பேதங்களிருந்துவருகின்றன. பூர்வீகத்தில் நமதுநாட்டார் ஒற்றுமையோடு வாழ்ந்ததாகவும் நல்ல நாகரீகமும் சீரும் சிறப்பும் செல்வமும் பெற்றிருந்ததாகவும் நன்ருய்த் தெரிகிறது. ஆகையால் ஜாதிமதபேதம் ஒற்றுமையை யுண்டாக்காதென்பது தவறேயாகும். ஒற்றுமைக்கு மனமும் புத்தியுமே காரணம். அவை யாவர்க்கு மொன்றே. இப்போது நடக்கும் ஐரோப்பா மகாயுத்தத்தில் ஒரு கட்சியில் வெவ்வேறு ஜாதியாரும் வெவ்வேறு மதத்தினரும், வெவ்வேறு பாஷையுடையோரும் ஒன்று சேர்ந்து யுத்தம்புரிவது ஒற்றுமை யடைந்து தானே, அநீதியையும் அகங்காரத்தையும் அடக்கவேண்டும், சமாதானத்தை நிலைப்படுத்த வேண்டும், இதற்காக நாம் ஜெயமடையவேண்டும் என்ற ஒரு நாட்டத்தில் மனதைநாட்டியிருப்பதால் ஒற்றுமையாய் வேலை நடக்கிறது.

அதுபோல் நாமும் நமது தாய்நாட்டின் க்ஷேமத்தை மனநாட்டமாய்க்கொண்டு யாவரும் சகோதரபாவமாய் சுயநலத்தைப் பொருட்படுத்தாது ஒருமனப்பட்டு நடக்கவேண்டும். அப்படிநடந்தால் ஒற்றுமை யுண்டாகாமற்போகாது. இப்போது நமதுநாட்டில் ஹிந்துக்கள், மகம்மதியர், கிருஸ்தவர் என்றமூன்று பிரதானமதப்பிரிவுகளே யிருக்கின்றன. இவர்களில் ஹிந்துக்கள்தவிர மற்ற இரண்டு வகுப்பினர்க் குள்ளும் மத வித்தியாசங்கள் அதாவது மதத்தில் பிரிவுகள் இருப்பினும் ஜாதி வித்தியாசம் ஹிந்துக்களைப் போலில்லை. அவ்வாறிருந்தும் இப்போது நம் தாய் நாடு முன்னுக்கு வரவேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டு மேற்படிமூன்று வகுப்பைச் சேர்ந்த ஜனத்தலைவர்களும் ஒருமனப்பட்டு ஒற்றுமையாய் உழைக்க முன்வந்திருக்கின்றனர்.

இப்போது ஹிந்துக்களாகிய நாம் நமக்குள் ஒற்றுமை பூரணமாய் இருக்கும் வண்ணம் நடந்துகொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. நமக்குள் பிர்ம, க்ஷத்ரிய, வைசிய, சூத்திரர் என்ற நான்கு பிரிவுகள் இருப்பினும் நான்கும் கூடியதே ஹிந்து என்ற ஒரு வகுப்பாகிறது. இந்த நான்கும் ஹிந்து என்ற ஒரு மனிதனுக்கு சிரசு, புயங்கள், வயிறு, கால்கள்போல் இருக்கின்றன. இந்த நான்கும் ஒருமித்து நடந்தால் தான் மனிதன் என்ற உருவம்

சுகமாய் ஜீவித்திருக்கும். இவைகளில் ஒவ்வொன்றுக்கும் மற்றவை களின் உதவி அவசியம் வேண்டியதே. நமக்குள் ஒருபோதும் விகல்பம் உண்டாகலாகாது.

உழுது பயிரிடும் தொழிலைச் செய்யக்கூடாத பிராம்மணர்க்கு மற்றைய வேளாளர் சூத்திரர் உதவியும், வைசியர் க்ஷத்திரருடைய உதவி மற்றையர்க்கும், பிராம்மணர் உதவி மற்றைய மூவர்க்கும் அவசியம் வேண்டியதே. இவர்களில் ஒருவர் பிரிவுபட்டால் ஹிந்து சமூகம் நிலைபெறாது.

அவ்வாறிருக்க இப்போது சிலர் பிராம்மணர்கள் மட்டும் உயர்ந்த பதவிகளி லிருக்கிறார்களென்றும் பிராம்மண ரல்லாத ஹிந்துக்கள் தாழ்ந்த நிலைமைகளிலேயே யிருக்கிறார்களென்றும் ஒரு விகல்பத்தை யுண்டாக்கி யிருக்கிறார்களென்று தெரிகிறது. அந்தோ! நம்தாய் நாட்டிலுள்ள யாவருமே சகோதர பாவமாய் ஒருமனப்பட்டு இராஜ பக்தியைக்காட்டி உழைக்க வேண்டிய இச்சமயத்தில் நமக்குள் இத் தகைய விகல்பம் உண்டாவது வெண்ணெய் திரண்டுவரும் சமயத் தில் தயிர்ப்பானையின் கீழ்த் துளைசெய்வதுபோ லிருக்கிறது. நமது தேசம் முன்னுக்கு வருவதை ஆலசியப் படுத்தும் கெட்டகாலமே இதைத் தூண்டியது போலும். மனிதன் தெய்வத்தன்மையை யடை யும்படி விடக்கூடாதென்று சைத்தான் வஞ்சனையாய் அவனுக்குத் துர்ப்போதனை செய்ததாக கிருஸ்து மதத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதைப்போல் இந்தியரை மேலோங்க விடலாகாதென்று கங்கணங் கட்டியிருக்கும் ஒரு பிசாசே நம்மவர்களை யிவ்வாறு தூண்டிய தென்று கருதவேண்டி யிருக்கிறது.

பிராம்மணர் மேலான பதவிகளிலிருப்பது உண்மைதான். இப் போது மட்டுமல்ல. இந்தியா உலகிலுள்ள எல்லா தேசங்களும் பொறாமைப்படக் கூடிய சீரும் செல்வமும் பெற்றிருந்த அக் காலத்திலும் தசரதர், இராமர், அரிச்சந்திரன், தருமராதியர் முதலிய ஹிந்து சக்ரவர்த்திகள் ஆண்டகாலத்திலும், பிறகு தார் தாரி, ஆப்கானிஸ்தானம் முதலிய விடங்களிலிருந்து மஹம்மதியர் அரசாண்டகாலத்திலும் அப்போதும் பிராம்மணர் உயர்பதவிகளிலே யிருந்ததாகவே தெரிகிறது. அவர்கள் சிரத்தையோடும் விடாமுயற்சி யோடும் கருமமே கண்ணுயிருந்து கல்விகற்று உயர்பதவிக்கு அவசிய மான யோக்கியதைகளைப் பெற்று அப்பதவிகளை யடைகிறார்கள். ஹிந்துக்கள் என்ற தேகத்திற்கு சிரம்போலிருக்கிறார்கள். அவர்க

ளிடத்தில் தெய்வீகம் பொருந்தி யிருக்கிறது. அதனால் ஹிந்துக்களில் மற்றை மூன்று வருணத்தாராலும் அவர்கள் போற்றப்படுகிறார்கள். நம் முன்னோர்களாகிய மகரிஷிகளிடம் அத்தெய்வத் தன்மை பெருந்தீபோல் சுடர்விட்டும் பிரகாசித்துக் கொண்டிருந்த தென்றால் இப்போதிவர்களிடம் சிறு தீப்பொறிபோலேனும் இல்லாமலில்லை. இச்சந்தர்ப்பத்தில் ஏகதேசத்திருட்டாந்தம் கருதலாகாது. ஏகதேசத்தில் பார்த்தால் எல்லா வருணத்தாரிடமும் குற்றம் இருப்பது சுபாவமே. இலைப் பழுப்பு எங்குமுண்டு.

பிராம்மணரல்லாத மற்ற மூன்று வகுப்பாரும் சுகத்திலும் துக்கத்திலும் அவர்களுடைய கூட்டுறவும் உதவியும் வேண்டியவர்களாகவே யிருக்கிறார்கள். இவர்களில் பிராம்மணர் எதற்கும் அவசியமில்லை யென்று நடக்கும் இரண்டொரு பிரிவினரும் தம்தம் ஜாதியாரிலேனும் சிலரை முதன்மையாய்க் கொண்டு எங்களுக்குள் அவர்கள் பிராம்மணர்களென்று ஏற்படுத்திக்கொண் டிருக்கிறார்கள். பிராம்மணன் எந்த அந்தஸ்திலிருந்தாலும் அவன் தியாகம் கொடுத்தாலும், பிறரிடமிருந்து வாங்கினாலும் அவனுடைய பதவி குறைவதில்லை. ஒரு பிராம்மணர் ஒரு வைசியனிடம் கூலிக்கு சமையல் வேலை செய்வதாயினும் அப்போதும் "சுவாமி சமையல் சீக்கிரமாகட்டும்" என்றே கூறவேண்டி யிருக்கிறது. யாசகத்திற்கு வந்தால் அவருக்கு வந்தனத்தோடேயே அளிக்கவேண்டி யிருக்கிறது. இத்தகைய அந்தணர்களே இராஜாங்கத்தில் உயர்பதவிகளிலிருப்பதற்கும் மற்ற வகுப்பார் இல்லாததற்கும் காரணம் எது? அவரவர்கள் முயற்சியேயன்றி வேறில்லை. பிராம்மணர், "நாங்களே மேல் பதவிகளில் இருக்கவேண்டும். மற்ற வகுப்பார் வரலாகா" தென்று தடுக்கிறார்களா? அல்லது துரைத்தனத்தார் மற்ற வகுப்பார்க்கு உயர்ந்த வேலைகளை அளிக்கமாட்டோமென்று கூறுகிறார்களா?

பாடசாலைகளில் வாசிக்கும் மாணாக்கர்களிலும், பிறகு பரீக்ஷைகளில் தேர்ச்சியடையும் மாணாக்கர்களிலும், உயர்தரக் கல்வியில் தேர்ச்சி யடைவோர்களின் எண்ணிக்கையிலும் பிராம்மணரே அதிகமாயிருந்தால், பின்னால் துரைத்தன உத்தியோகங்களில் அவர்களே அதிகமா யிராமல் வேறு யாரிருப்பார்கள்?

ஒவ்வொரு ஜாதியாரும் தாம் தாம் முன்னுக்கு வர முயற்சி செய்வதைக் கருணை பொருந்திய நீதியான ப்ரிடிஷ் துரைத்தனத்தில் தடுப்பவர் யாருமில்லையே. ஒருவன் மேல்அந்தஸ்தி லிருக்கி

றுனே யென்று ஏக்கமிடுவது தீயகுணமாகிய பொறாமைக்குணமா கும். அவன் அவ்வாறு பதவி யடைந்ததற்கு நாம் சந்தோஷமே அடையவேண்டும். ஆனால் அவனைப்போல் நாமும் மேல் பதவிக்கு வரவேண்டுமென்று முயற்சி செய்வது பொறாமையாகாது.

பிராம்மணரல்லாத மற்ற வகுப்பைச் சேர்ந்த ஹிந்துக்களாகிய நாமும் அவர்களைப்போல் மேலான பதவிகளை யடையவேண்டுமா யின் நமது சந்ததியாரும் உயர்தரக் கல்வி யடையும்படி செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து நம்மவர்களை முன்னுக்குக் கொண்டு வரவேண்டிய முயற்சிகளைச் செய்கையில் நடத்தவேண்டும். வாயால் மட்டும் பேசுவதில் ஒரு பயனுமில்லை. ஒவ்வொருவரும் நன்மையைக் கோரியே ஒன்றைச் செய்கிறார்க ளென்பது உண்மையே. ஆனால் அதற்குச் செய்யவேண்டியவை களைச் சாந்தமாகவும், சரியான விதமாகவும் செய்யவேண்டும். தவ றாய் நடந்தால் காரிய சித்தியாகாததோடு நன்மைக்குப் பதில் தீமையே சித்திக்கும். ஒரு காய் பழமாவதற்கு உஷ்ணம் வேண்டு மென்று, தீயில் காட்டினால் பழுக்குமோ. காயும் அடியோடு அழியும்.

ஆகையால் பிராம்மணரல்லாத நாமும் அவர்களைப்போல் முன் னுக்கு வரவேண்டுமாயின் ஹிந்துக்களாகிய நமக்குள்ளேயே மனஸ் தாபங்களை யுண்டாக்கிக் கொள்ளலாகாது. அவ்வாறு உண்டாக்கிக் கொள்வது நாம் முன்னுக்கு வரத்தகாதென்று காரணங்களைக்கூறு வோர்க்கு நாமே ஒரு நல்ல காரணமாகிய ஆயுதத்தைச் செய்து கொடுத்ததாக முடிவதோடு, அவர்கள் நம்மைக் கேலிசெய்யவும் வழியுண்டாகும். ஆகையால் சகோதர சகோதரிகளே! நாம் முன் னுக்கு வரவேண்டியதற்காக ஒற்றுமையாயுழைக்கவேண்டிய சமயத் தில் நமக்குள் மனஸ்தாபத்தையும், பிரிவையும், கட்சி பேதத்தை யும் உண்டாக்கும் எந்தவிஷயத்திலும் நாம் தலையிடலாகாதென்பதை மறவாதீர்கள். க்ஷேமமடைவது ஒற்றுமையால் கிடைக்குமேயன்றி பிரிவினையால் ஒருபோதும் கிடைக்காது. இன்னொருவரைப்போல் நாம் மேலுக்கு வரவேண்டுமென்று போட்டி செய்தால் அது சந் தோஷமும் சமாதானமும் ஒற்றுமைக்கு பங்கம் வராததுமான போட்டியாயிருந்தால்தான் அதனால் நன்மை யுண்டாகும். ஆகையால் நாம் மறந்து அல்லது மயங்கி, தவறான நெறியில் பிரவேசிக்காதபடி நம்மைக் காக்க வேண்டுமாய் எல்லாம் வல்ல கருணாநிதியாகிய சச் சிதானந்தப் பரம்பொருளை திரிகரணங்களாலும் பிரார்த்திப்பாம்.

## தமிழ்ச் சிறப்பு.

தொண்டர்நாதனைத் தூதிடைவிடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்.

(திருவிளையாடற்புராணம்)

என்று சொல்லும்படி பெருமைவாய்ந்த நந்தமிழணங்கினைப்பற்றி இச்சஞ்சிகையி லேயே இரண்டு மூன்றுதடவை வியாசங்கள் வரையப்பெற்றுளவேனும், ஜன சமூகத்தின் அபிவிர்த்திக்கு முதற்கூருயிருக்கின்ற நந்தமிழ்ப்பாஷையைப்பற்றி எத்தனைதடவை சொல்லினும் தெவிட்டாக்கனியாகும் என்ற ஒரே நோக்கத் தோடுதான் இதை எழுதத்துணிந்தேன்.

இப்பரதகண்டத்து வழங்கும் பற்பல பாஷைகளுள் ஆரியம், தமிழ் எனும் இந்த இரண்டுமே பூர்வீகபர்ஷைகளாம். இவையிரண்டும் கடவுளினிடத்தே உற் பத்தியானவையென்று இதிகாசபுராணங்கள்கூறுகின்றன. இவை உற்பத்தியான காலம் எதுவென்று திட்டமாய்க்கூற எவராலும் முடியாது. ஒருவாறு கால வரையிட்டவர்களும் உத்தேசமாய்ச் சொன்னூர்களேயன்றி உண்மையைக் கண் டார்களில்லை.

தமிழ்ப்பாஷையைத் தந்தருளினவர் அகத்தியமகாமுனிவர்என்றும் அவரே அதன் விர்த்திக்குக்காரணமென்றும் சிலர்கூறுகின்றனர். அவ்வாறு கூறுதல் ஒருசிறிதும் பொருந்தா தென்பதற்கு

“ வடமொழியைப் பாணினிக்குவகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல் * * * * * ”

(காஞ்சிபுராணம்)

என்றபடி கடவுளினிடத்தே இரண்டும் உற்பத்தியானதென்பது தெரிகிறது. சமஸ்கிருதத்திற்குப் பாணினிபோல் தமிழுக்கு முதன்முதல் இலக்கணம்செய்த வர் அகத்தியரே.

தமிழும் ஆரியமும் சமத்துவம் உடையனவாகும். அது, இந்த இருபாஷை களையுங் கற்றுணர்ந்த சிவஞான யோகீஸ்வரர் ”.........இருமொழியும் நிக ரென்னு மிதற்கையமுளதேயோ” என்று கூறி யதனுல் விளங்குகிறது. இவை தம்முள், ஆரியம் வேதாகம அதிகாரத்தாலும், உச்சாரணவன்மையினுலும் மந்தி ரோபதேசப் பயிற்சியினுலும் ஆண்லட்சணம் அமையப்பெற்றது. தமிழ் என் பது தனக்கு இணையில்லாப் பாஷை அல்லது இனிமையுள்ள மொழியெனப் பொருள்படுதலின் ஆரியத்தினும் சிறந்தது என்றுபெறப்படுதலினுலும், கன்ன டம், தெலுங்கு, மலையாளம் முதலிய மகப்பேற்றை உடையதினுலும், தன் இனிய ஓசையினுலும், மிருதுத்தன்மையினுலும், தேவார திருவாசகவசீரணத்தி னும், பெண் இலட்சணம் அமையப்பெற்றது.

ஆரியம் வடதிசைசென்று வடமொழியெனப் பெயர்பெற்று நைமிசாரண்ய ரிஷீஸ்வரர் கூட்டத்தினாலும் பின்னர் வேதியவித்தகர்களாலும் பரிபாலிக்கப் பட்டு சிறப்புற்றும் கடைசியில் உலகவழக்கின்றி இறந்தது. தமிழ் என்னும் பெண்ணோ தென்றிசைசென்று தென்மொழியெனப் பெயர்பெற்று மங்கைப் பருவமடைந்து என்றும் இளமைத்திறம் பொருந்தி, தேவாமிர்தமோ என்று ஐயுறுமாறு இமைதந்து இன்றும் விளங்குகிறது.

மனோன்மணியமென்னும் நாடகத்திலும் தமிழ்த் தெய்வ வணக்கத்தில்,

" பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத்திறம் வியந்து செயன்மறந்து வாழ்த்ததுதுமே."

என்று மேற்குறித்த கருத்தை வெளியிட்டிருக்கிறது.

தமிழ் என்னும் பதத்திற்கு இனிமை என்பது பொருள். அது ஆகு பெய ராய் அவ்வினிமையையுடைய சொல்லை யுணர்த்தி நிற்குமென்று ஒரு சாரார் சொல்லுவர். அங்ஙனமின்றி இமிழ், உமிழ் குமிழ், என 'ழ' கரப் பேறு பெற்ற பதங்கள்போல தமிழ் என்னும் பதம் 'தமி' என்னும் வினையடியாய்ப் பிறந்து வினைமுதற்பொருளை உணர்த்திய விகுதிகுன்றி தனக்கு இணையில்லாப் பாஷை என்னும் பொருள்கொண்டு நின்றது என்பர் மற்றொரு சாரார். இவற் றை யோராது திராவிடம்என்னும் ஆரிய மொழியே தமிழ் என்று ஆய்விட்டது என்பாரும் உளர். அது எவ்வாறாயினும் தமிழ் என்னும் தென்மொழிக்கு தென் சொல்லாகிய பெயரெனக் கொள்ளலே தகுதி.

இனி, சிலர் தமிழ் தனிபாஷை யன்றென்றும் சமஸ்கிருதத்திலிருந்து உற் பத்தியாயிருத்தல் வேண்டும் என்றும் கூறுகின்றனர். அது பொறுத்தமானதல்ல வென்பதற்கு ஆதாரங்களுள. சங்கமருவிய நூல்களாகிய, குறள், திரிகடுகம், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், ஏலாதி, பழமொழி, என்பவற்றில் சமஸ் கிருத பதங்கள் எவ்வளவு சொற்பமாகக் காணப்படுகின்றன. தமிழ்பாஷைக்கு சமஸ்கிருதம் தாயாயின், பண்டைக்காலத்தனவாகிய மேற்கூறிய நூல்களில் சமஸ்கிருதம் விசேஷமாய் விரவி யிருத்தல் வேண்டுமே.

இன்னும் வடமொழியி லில்லாத புணர்ச்சி யிலக்கணங்களும், வினைத் தொகை, குறிப்புவினை முதலிய சொல்லிலக்கணங்களும், பால் விகுதிகளும், ஐந்திணை யியல்புகளும் அவற்றின் துறைகளும், வெண்பா கலித்துறை முதலிய செய்யுளிலக்கணங்களும், தமிழ்ப்பாஷைக் குளவாகவும், இவையனைத்தும் முதல் நூலாகிய அசத்தியத்தின் கண்ணே கூறப்பட்டிருத்தலாலும், தமிழிலக்கணம் வேறு, சமஸ்கிருத இலக்கணம் வேறு என்பது தெளிவாகிறது. ஆராயப் புகின் இன்னும் இவைபோன்ற அநேக நியாயங்கள் நமக்குத் தோன்றும்.

இன்னும், தமிழில் சம்ஸ்கிருதத்தில் தமிழும் விரவி யிருத்தற்குக் காரணம் என்னவென்முல் பண்டைக்காலத்து வித்வான்கள் இருபாஷையிலும் அதிக தேர்ச்சியடைந்திருந்தமையால் அவர்கள் கலந்துபேசி வந்ததேபோல் இப்பொழுதும் வழங்கி வருகிறது. தமிழில் எத்தனை வடமொழிகள் கலந்திருக்கின்றன என்று எண்ணக்கூடாதபடியும், தமிழ்வார்த்தையிது, வடமொழி யிது என்று வித்தியாசம் அறிய முடியாதபடியும் அவ்வளவு கலந்திருக்கிறது. உதாரணமாக, சாதாரணமாய் யாவரும் தமிழ்வார்த்தையென்று நினைக்கக்கூடிய சாட்சி, கோபம் முதலியமொழிகள் வடமொழிகளாயிருக்கின்றன. அவைகளுக்குத் தமிழ்மொழிகள் 'கரி' 'வெகுளி' முதலியவைகளே அகப்படுகின்றன.

---

## நன்மைவிதைத்தால் நன்மைவிளையும் தீமைவிதைத்தால் தீமைவிளையும்.

ஒரு சமஸ்தானத்தில் ஓர் பிராமணர் சூரியோதயத்திற்கு முன் எழுந்திருந்து ஸ்நானம்செய்து, கர்மானுஷ்டானங்களை முடித்து ஒரு எலுமிச்சம்பழமெடுத்துக்கொண்டுபோய் இராஜாவைக் காணுகிறது வழக்கம். அரசன் கையிற் பழத்தைக் கொடுக்கும்போதெல்லாம் "நன்மைவிதைத்தால் நன்மைவிளையும் தீமைவிதைத்தால் தீமைவிளையும். நன்மையும் தீமையும் பின்வரக்காணலாம்." என்றிவ்வாறு தினம்சொல்லி ஆசீர்வாதம்பண்ணி வருவார். அரசனுக்குத் தினம் இவ்வாறு ஆசீர்வாதம்பண்ணிவருகிறவர் யாரோ மகாபெரியவர் என்று அரசன் இவரிடம் வெகு விசுவாசம்வைத்து பூஜாகாலத்தில், இவரை எப்பொழுதும் தன்னுடன் கூடவைத்துக்கொண்டிருப்பதுவழக்கம். இப்படியிருக்க ஒருநாள் அரசன் ஏதோ அவசரத்தால் பூஜையில் உட்காரும்போது தனது பட்டாக்கத்தியை அந்தப்புரத்தில் வைத்து மறந்து வந்துவிட்டான். தினம் பட்டாக்கத்தி வைக்காமல் பூஜை செய்கிறதேயில்லை. ஆனதுபற்றி தன்முன்னில் உட்கார்ந்திருக்கும் பிராமணனைக் கூப்பிட்டு "சுவாமி தாங்கள் அரண்மனைக்குள் என்படுக்கையறைக்குப்போய் கட்டிலின்பேரில் மெத்தையின் கீழ் என்பட்டாக்கத்தி யிருக்கிறது, அதை எடுத்துவரவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான். பிராமணர் அப்படியே ஒப்புக்கொண்டு அந்தப்புரத்துக்குச் சென்முர். அந்த ஊர்மந்திரி இராஜபத்தினியிடம் நெடுநாளாய் பிரீதிவைத்து அரசன் பூஜையிலுட்காருகிற வேளைபார்த்து அந்தப்புரத்துக்கு வந்து அவளுடன் இருந்துபோகிறதுவழக்கம். அந்தப்படியே அவர்களிருவரும் அன்றையதினமும் கட்டிலின்பேரில் உட்கார்ந்திருந்தார்கள். பிராமணன் பார்த்து நடுநடுங்கி கண்ணைமூடிக்கொண்டு சிவசிவா வென்று மெத்தையைமட்டில் தூக்கிக் கத்தியை எடுத்துக்கொண்டுபோய் இராஜாவிடம் கொடுத்தார். ஆனுல் கண்டசங்கதியைப்பற்றி வாயைத்திறக்கவேயில்லை. அவரவர்கள் தலைவிதி, நாம் என் அந்தப்பாவத்திற்குப் பாத்திரனுகவேண்டும் என்றுஇருந்துவிட்டார். பிராமணர்வந்து தங்களிருவரையும் இருந்தநிலையில் பார்த்துப்போகவே, மந்திரி இராஜபத்தினி யிருவர்களுக்கும் சுருக்கென்று பயம் தோன்றிவிட்டது. உடனே மந்திரி, இவன் நம்முடைய இரகசியத்தை இரா

ஜாவிடம் சொல்லிவிடுவான், நாளைகாலைக்குள் இவனைக் கொன்றுவிடவேண்டும் என்றான். அவளும் அப்படியே ஒப்புக்கொண்டு தலைமயிரை யவிழ்த்துவிட்டு அரசன் சாப்பிட உட்காரும் சமயம்பார்த்து அவனிடம்சென்று, ஓ, என் பிராண நாயகா, அந்தப்புரத்துக்கு இன்னாரையனுப்பலாம் இன்னாரையனுப்பக்கூடாது என்னும் புத்தி இத்தனைநாள் இராஜாவாயும் தங்களிடம் இல்லையா. அந்தப்பிரா மணன் என்ன கிழவனானாலும் அவன் புத்தி சபலம்போயிற்றா, என்னைக் கையைப்பிடித்திழுத்தான் என்றாள். அரசன் உடனே கோபங்கொண்டு மந் திரியைக்கூப்பிட்டு பிராமணன்பேரைச்சொல்லி இவன் இன்னமாதிரி குற்றம் செய்திருக்கிறான். இவனுக்கென்னதண்டனை, என்றான். இவ்விதக்குற்றஞ் செய்தவனை எண்ணெயைக் காயவைத்து பொரித்துவிடும்படி மனுஸ்மிருதி யில் சொல்லியிருக்கிறது என்று சொல்லிவிட்டு மந்திரி வீட்டிற்குப்போய்விட் டான். உடனே அரசன் கொலையாளிகளைக் கூப்பிட்டு “சாயந்திரமே ஒரு பெரிய அடுப்பு கட்டி, அதில் வெல்லக்கொப்பரையொன்று பெரிதாகவைத்து அதில் ஐம்பது ஆடம் தேங்காயெண்ணெவிட்டு மறுக மறுகக் காயவிட்டுக்கொண் டிருங்கள். காலமே உதயத்திற்கெல்லாம், ‘ஒருமனிதன் வந்து ஆயிற்றா என்று கேட்பான். அவன் யாராயிருந்தாலும் முன்பின் யோசிக்காமல் அவனை அப்ப டியே கட்டி கொப்பறையிற்போட்டுபொரித்து விடுங்கள்” என்று கட்டளையிட்டு விட்டு, அரசன் சாப்பிட்டபின்பு பிராமணனை வரவழைத்து “ஓய், நீர் காலமே ஸ்நானத்துக்குப் போகும்போது கீழ்வாசலில் எண்ணெய்காய்ச்சிக்கொண்டு சிலர் உட்கார்ந்திருப்பார்கள். அவர்களிடம்போய் ஆயிற்றா என்று கேளும். அவர் கள், என்ன சொல்லுகிறார்களோ, அதை என்னிடம் தெரிவியும்” என்று சொல்லி யனுப்பிவிட்டு, “தெரிவிக்கப்போகிறதேது, உம்மைக்கொப்பரையிற் போட்டு எரித்துவிடப்போகிறார்கள்” என்று எண்ணிக்கொண்டிருந்தான். பிராமணனைக் கூப்பிட்டுச் சொன்னதாவது, கொலையாளிகளிடம் சொன்ன தாவது மந்திரிக்கு தெரியவே தெரியாது. அவன் காலமே பிராமணனைக் கொப் பரையிற்போட்டு எரித்துவிடுவார்கள். நம்மிஷ்டப்படி அப்புறம் பயமில்லாமல் அந்தப்புரம்போகலாம் என்று நினைத்துக்கொண்டு எப்பொழுது பொழுதுவிடி யப்போகிறதென்று காத்திருந்தான். அருணோதயமாயிற்று. மந்திரி எழுந் திருந்து கொப்பரையைக் காய்ச்சிக்கொண்டிருக்கும் ஆட்களிடம்சென்று, ஆயிற்றா என்றான். யாராயிருந்தாலும் பார்க்கவேண்டாம் என்ற ஆக்ஞை யைக் கொலையாளிகள் மனதில் வைத்திருந்தவர்களாகையால், மந்திரி என்று பின்வாங்காமல் அவனைக் கட்டித் தூக்கிப்போட்டு பொரித்துக் கொப்பரையைக் கீழ் இறக்கிவைத்துவிட்டார்கள். பிறருக்கு நினைக்கும்கெடுதி தனக்கே, இல பிக்கும் என்பது போல, பிராமணருக்குக் கோரிய வஞ்சகம் மந்திரியைக் கெடுக் காதா ? பிராமணர் வழக்கம்போலெழுந்திருந்து ஸ்நானம் செய்யப்போகும் வழி யில் அவிந்திருக்கும் அடுப்பிடம்சென்று அங்கிருப்பவர்களை ஆயிற்றா என்று கேட்க, ஆயிற்று, மந்திரிவந்து இராஜாக்ஞைப்படி கேட்டான், அவனைப் பொரித்துவிட்டோம் என்றார்கள். பிராமணர் ஆச்சரியமடைந்து குடல்தெறிக்க

இராஜாவிடம் ஓடிவந்து, ஆய்விட்டதாம், மந்திரியைப் போட்டுப் பொரித்து விட்டார்களாம் என்று தெரிவித்தார். இராஜாவுக்கோ உண்டானவியப்பு அவ்வளவிவ்வளவில்லை. உடனே ஓடோடியும் கிழக்குவாசல்சென்று நடந்த சங்கதியைவினவ, அவர்கள் "மகாராஜாவே, தாங்கள் முன்பின்பாராமல் யாராயிருந்தாலும் எவன் ஆயிற்றா வென்று கேட்கிறானோ அவனைப் பொரித்துவிட எண்ணெயைத் தயாராக வைத்திருக்கச் சொன்னீர்கள். அப்படியே நாங்கள் வைத்திருந்தோம். மந்திரியானவர் ஒருநாழிகைக்கு முன்வந்து கேட்டார். அவரைத் தங்க ளுத்திரவுபடி பொரித்துவிட்டோம்" என்றார்கள். மந்திரி ஏன் அவ்வளவு தீவிரமாய்வந்து ஆயிற்றாவென்று கேட்கவேண்டும் என்று இராஜாவுக்கு சந்தேகம்தோன்றி, பிராமணரைப்பார்த்து நேற்று நடந்த சங்கதியை நடந்தபடி சொல்லும் இல்லாவிடில் உம்மைக்கொன்று விடுவேன் என்று கோபத்தோடு கேட்க அவர் எல்லாவற்றையும் உள்ளது உள்ளபடியே சொல்லிவிட்டார். அரசனுக்குவந்தசந்தோஷம் கணக்கிலடங்கவில்லை. தன் சம்சாரத்தையும் அந்த எண்ணெயில்பொரித்துவிட உத்திரவுசெய்து பிராமணரைப்பார்த்து, தினம் எலுமிச்சம்பழம் கொடுக்கும்போது, தாங்கள்சொல்லிவந்த வசனத்தின் அர்த்தம் இன்று தான் அறிந்தேன். நன்மைவிதைத்தால் நன்மைவிளையும், தீமைவிதைத்தால் தீமைவிளையும், நன்மையும் தீமையும் பின்வரக்காணலாம் என்பது உங்கள் விஷயத்திலும் மந்திரிவிஷயத்திலும் சரியாய் முடிந்தது. நீங்கள் நல்லது விளைத்துவந்தீர்கள். அந்த நன்மை உங்களைக் காப்பாற்றிற்று. மந்திரி தீமை விளைத்து நாசம் அடைந்தான், என்று அவரைப் பலவாறு புகழ்ந்து, அவரை மந்திரிப் பதவியில் வைத்துவந்தான். அவருக்கும் காலத்துக்குத்தகுந்தபுத்தி வந்துவிட்டது. இராஜ்ஜியகாரியத்தை சரிவரநடத்தி யாதொரு குறைவுமில்லாமல் இராஜ்ஜியநீதி செலுத்திவந்தார்கள். இக்கதையினால், பரோபகார சிந்தையுடைய பேர்களுக்கு, கடவுளால் எப்போதும் நன்மையே பயக்கப்படுகிறதென்றும், தீய எண்ணங்கொண்டபேர்களுக்கு கடவுளின் கட்டளையால் தீங்கு நேரிடுவதிற் சந்தேகமில்லை என்பதையும்தெரிந்துகொள்ளலாம்.

---

## நட்பிற் பிழைபொறுத்தல்.

இஃது இக்கடல் புடைசூழ்ந்த நிலவுலகின் கண் மானிடராயுதித்தோர் யாவரும் அத்தியாவசியகமாகக் கைக்கொள்ளவேண்டியதோர் விஷயம்.

நட்பிற் பிழைபொறுத்தல் : இச்சொற்றொடர்க்குத் தம்மாற் சினேகிக்கப் பட்டவரிடத்தில் உள்ளனவாகுங் குற்றங்களைப் பொறுத்தல் என்பது பொருள்.

நட்பென்பது ஈண்டு தொழிலாகு பெயராயுடையார்மேனின்றது.

இனி நட்பு என்றாலென்ன ? அஃது என் செய்தல்வேண்டும் ? செய்தற்குரியார் யார் ? அவ்வாறு செய்தலான் வரும்பயனென்ன ? பிழைசெய்தாரைத் தண்டித்தலன்றோ உலகவழக்கு! அதனைப் பொறுத்தல்வேண்டுமென்பதுபொருந்துமா ? பொறுத்தலால் வரும்பயனென்ன? மிகுந்த நட்புச்செய்தும், அதனைப் பொறுத்தும் கீர்த்திபெற்ற முன்னோர்கள் யாரேனும் உளரா ? என்பன வாதி

யாய கேள்விகளெல்லாம் இதனிடத்து நிகழ்கின்றன. இவைகளுக்கு ஏதோ சிறியேனது சிற்றறிவிற்கு எட்டியவளவிற் சிலவற்றைத் தெரிந்தெழுதுகின்றேன். அவைகளிலுள்ள குற்றங்களைப் பெரியோர்கள் பொறுத்தருள்வாராக.

ஒருவன் துன்பத்திற்கிடமாம் வழியிற்செல்லுதலை விலக்கி, நல்வழியிற் செலுத்தி, அவனுக்கு விதிவசத்தாற் றுன்பம்வந்துவிடின் அதற்குத்தானும் உடன்வருந்தி இரண்டியாக்கையும் ஒன்றுபோலிருந்து எந்நேரமும் இருவர் மனமும் ஒத்து, அரியநூற்பொருள்களை ஆயுந்தோறும் நமக்குண்டாகும் பெருமகிழ்ச்சிபோல இருவரும் பயிலுந்தோறும் அளவில் ஆனந்தமெய்திக் கலந்திருப்பதே நட்பென்று கூறப்படும்.

இதுபற்றியே ஆன்றோர்களும்,

“ அழிதருநெறியிற் செலவினைவிலக்கி
யாம்வழிச்செலுத்தி யூழ்வினையால்
அழிவுவந்தடுப்பி னதற்குடனல்லாந்
தாக்கைவேறின்றி யாருயிர்கள்
ஒழிவகையின்றி யுணர்ச்சியொத்தருநூ
லுணர்தொறுமுறு நயம்போலக்
கழிமகிழ்நாளும் பயிலுறுமளராக்
கலப்பதே நட்பெனப்படுமால்.” என்றும்,

“ அழிவினவைநீக்கி யாறுய்த்தழிவின்க
ணல்லலுழப்பதா நட்பு.” என்றும்,

கேடுதரத்தக்க வழிகளிலிருந்து நீக்கி நல்வழியிற்செலுத்தி (நீக்கமுடியாத) கெடுதிவந்தகாலத்து அத்துன்பத்தைக் கூடவிருந்து அனுபவிப்பதே நட்பு.

“ நவிறொறுநூனயம் போலும்பயிறொறும்
பண்புடையாளர் தொடர்பு.”

நூற்பொருளைக் கற்குந்தோறும் இன்பந்தருவதுபோல், நற்குணமுடையவர்களுடைய நட்பு பழகுந்தோறும் இன்பத்தைத்தரும் என்றும் கூறியுள்ளார்கள்.

நட்பெனினும், சிநேகமெனினும், கேண்மையெனினும், ஒரு பொருளனவே.

இந்நட்பு ஏன் செய்யவேண்டுமெனின்—ஒருவருக்கு ஓர் துன்பம் வந்துவிடின் அதைத் தனக்கு அத்தியந்தமாய் வேண்டியோரிடத்திற் சொல்லிக்கொண்டா லொழிய அதுதீராது. அவர் தைரியங்கூறின் நன்குதெளியும். இதனைப் பெண்பிள்ளைகள் தங்கள் வீட்டிலோர் துன்பம் வந்துவிடின், அயல்வீட்டுப் பெண்களுடன் பேசிக்கொள்ளும்பொழுது நேற்று எனக்குண்டான துயரத்தைப்பற்றி யென்னசொல்லப் போகிறேன். அதைச் “சுவரோடேனுஞ் சொல்லியழுதாலொழியத் தீராது” என்று கூறும் பழமொழி வாக்கியம் நன்கு வற்புறுத்துகின்றது. இதனுள் சுவரோடேனும் என்று அறிவில்பொருளை வைத்து உம்மைகொடுத்திருப்பது ஒருவனுக்கு நண்பர்கள் முக்கியமாய்வேண்டும்

என்பதை வற்புறுத்தற்கு ஓர் சிறந்தபொருளுடைத்தாய் நிற்கின்றதல்லவா ? இந்நட்பில்லாவிடின் தாழ்ந்ததுமுதல் உயர்ந்ததுவரைத் தாம்கொண்ட காரியத்தைமுடித்தல் இயலாது. ஆதலால் நட்புச்செய்யவேண்டுவது அவசியமென்பது பெறப்பட்டது. இன்னும் இதைப்பற்றி யாவரும் ஸ்வாநுபவத்தால் அறிந்துகொள்ளத்தக்கது.

இனிச்செய்ததற் குரியாரைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். ஏது காரணம் பற்றி இவ்வாறு ஆராயவேண்டுமெனில் ஒருவன் குணங்களை ஆராயாமல் அவனோடு அவசரப்பட்டு நட்புக்கொளின் அதனாற் சிலசமயங்களில் தீங்குநேருமாதலானும், அவ்வாறு தீங்குநேர்ந்தவிடத்து அவனைக் கைவிடின் இப்பொழுது எடுத்துக் கூறிவரும் நட்பிற் பிழைபொறுத்தல் என்னுந் தருமத்தைக் கைவிட்டோனுவனுதலானும் முன்னரே ஆராய்ந்து நட்புக்கொள்ளவேண்டுவது முக்கியம். இவ்வாறு ஆராயாது நட்புக்கொண்டு தீங்கடைந்ததைப் பஞ்சதந்திரம் என்னும் புத்தகத்தை நன்குபடித்தறிந்தோர்களும், இக்காலத்து வியவகாரம் பண்ணிக்கொள்ளுஞ் சிலரைக் கண்டறிந்தோர்களுந் தெள்ளிதிற்றெரிந்திருப்பர். அன்றியும் எனது அனுபவசித்தமாயறிந்த சிலவற்றைக் கூறுகின்றேன். யான் இப்படிப்பில்தலையிடுவதற்குமுன்பும் தலையிட்டுச் சின்னாளும் என்னுடன் ஒத்த வயதினரான சிலரோடு ஆராயாது விரைந்து நட்புச்செய்தும் பின்பு அவர் சொல்லுஞ் சிலசொற்களுக்கும் வஞ்சமனத்திற்கும் பொறாதேனாய் நீக்கியும் வந்தேன். பின்பு இடையிடையே ஆன்றோர்களது உபந்யாசங்களைக் கேட்குங்பொழுதும் நூல்களைப் படிக்கும்பொழுதும் இறைவனருளால் இந்நட்பிற் பிழைபொறுத்தலைப்பற்றியும் இது சம்பந்தமான பிற விஷயங்களைப்பற்றியும் ஏதோ சிறிது அறியநேர்ந்தது. அவ்வாறு நேர்ந்தகாலத்து முன்னர் ஆராயாது செய்த நட்புக்கும் பின்பு அவற்றை நீக்கியதற்கும் மனம்வருந்தியது இத்துணையவென்பதொன்றன்று. இவ்வாறே ஒவ்வொருவருந் தம்மனத்திற்றாமே நோக்கில் நன்கு புலனும். அனுபவமான தன்விஷயத்தைக் கூறப்புகின் இவன் இவ்வாறுதான் நடந்துவருகின்றனனே பிதற்றுகின்றனன் எனக்கூறுவாருஞ் சிலருளராதலின் இம்மட்டுடன் அதை நிறுத்தி மேல்விடயத்தைத் தொடங்குகின்றேன். இவ்வாறு சிலரைச் சிலர்சொல்ல யான் காதுகொண்டு கேட்டுளேனாதலின் இதை ஈண்டு கூறவேண்டியேற்பட்டது. இத்துணையுங் கூறியவாற்றால் ஆராய்ந்தே சினேகஞ் செய்யவேண்டுமென்பது விளக்கம்.

இனி அவ்வாறு நட்புக்கொள்ளுமிடத்து நல்லமதியும், குடிப்பிறப்பும், ஒழுக்கமும், குணநலமும் உடைமையைப்பற்றி ஆராய்ந்து நட்புக்கோடல் வேண்டும்.

மேற்கூறியவைகட்குச் சான்றாக.

“ ஆய்ந்தாய்ந்துகொள்ளாதான் கேண்மைகடைமுறை
தான்சாந் துயரந்தரும்.” என்றும்,

“ குணனுங்குடிமையுங் குற்றமுங்குன்றா
வினனுமறிந்தியாக்க நட்பு.” என்றும்,

" நன்மதியுடைமை குடிகுணங்குற்ற நல்லினத்தானுமெத்திறத்தும்
பன்முறையாய்ந்து நட்பினைக் கொள்க." என்றும்
பெரியோர் கூறியுள்ள செய்யுட்கள் அறியத்தக்கன. (தொடரும்)

---

## காபி, தேயிலை, பானம் பண்ணுகிறவர்களுக்கு ஓர் அறிவிப்பு.

காபி அல்லது தேயிலையைப் பிரதிதினமு முபயோகிப்பதால், உண்டாகும் கெடுதிகள் பல உண்டென்பது அனேகருக்குத் தெரிந்தவிஷயமே. தவிர, "வழக்கப்படுத்திய விஷகுணமுடைய பதார்த்தத்தை கொஞ்சம் கொஞ்சமாய்க் காலக்கிரமத்தில் விலக்கிவந்து, பிறகு வேறொரு விஷகுணமற்ற பதார்த்தத்தை அதேவிதமாக வழக்கத்துக்கு கொண்டுவரவேண்டியதுதான் அவசிய" மென்று அனேக ஆயுர்வேத ஆங்கில வைத்தியசாஸ்திரிகளுடைய அபிப்பிராயமாயிருப்பதால், தற்காலத்தில் மேற்படி காபி, தேயிலைக்குப் பதிலாக, வழக்கமாக உபயோகப்படுத்தக்கூடிய வேறு ஏதேனும், அவ்வளவு விஷத்தன்மையற்ற பொருள்கள் ஒன்றிரண்டு ஏற்படாதவரையில், திடீரென்று மேற்படி காபி, தேயிலையை தினப்படி உபயோகிக்கிறவர்கள் விடமுடியாதபடியால், அவைகளுக்குப் பதிலாக, ஆவாரஞ்செடியினுடைய இலை, பூ, இரண்டையும் உலர்த்தி பக்குவமாய் சூரணம்செய்து, தினப்படி கஷாயம்போட்டு சாப்பிட்டுவருவதால், உஷ்ணம் தணிந்து, நீர் ரோகிகளுக்கு அதிகநீர் இறங்குவதையும், நீரில் அதிகசர்க்கரை போவதையும், மேற்படி நீர்ரோகிகளுக்கு தாதுக்கள் சீழ்கொண்டு கெட்டுப்போவதை தடுக்கும் குணமுடையதும், நல்ல டானிக்காகவுமிருப்பதால், மேற்படி ரோகங்களை, அதிகப்படுத்தும் குணமுடைய காபி, தேயிலை, முதலியவைகளைவிட வெகு நல்ல குணத்தையுடையதாகத் தெரிகிறது. சிலமருந்துகளுக்கு, இந்த கஷாயத்தை, அனுபானமாகவும் கொடுக்கிறார்கள். இந்த கஷாயத்தை பிரதிதினமும் சாப்பிட்டுவருவதால், தேக புஷ்டி உண்டாவதுடன், நரம்பு மண்டலங்களையும் பலப்படுத்தும் குணமுடையதால், அதிகமாய்ப் படிக்கும் மாணுக்கர்கள் காபி, தேயிலைக்குப் பதிலாக இதையே உபயோகிப்பது வெகு சிலாக்கியமாயிருப்பதுடன், பாலர், விருத்தர்கள், ரோகிகள், முதலியவர்களுக்கெல்லாம் இது நிரபாயாமான தினப்படி உபயோகிக்கக்கூடிய பொருளாகவுமிருக்கிறது.

(மேற்கண்டவைகள் ஒரு சாஸ்திரத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டது)

---

## பேதமை.

இந்த உலகம் சுகமென்பது பேதமையினும் பேதமையே. சுகதுக்கங்கள் மாறிக்கொண்டேயிருக்கின்றன. இக் கலியுகத்தில் அநேகர்களுக்கு விபரீதகுணங்களுண்டாகி, வேதத்தை நிந்தித்து மகரிஷிகளின் வாக்கியங்களை உல்லங்கனஞ் செய்து சொந்த மதத்தை யறியாமலே வெறுத்து புறமதங்களிற் புகுந்து புதிய

ஆசாரங்களை மேற்கொண்டு பலராலும் இகழப்பட்டுக் கடைசியாக ஒன்றுந் தெரியாமல் வீணாய் மனோசஞ்சலத்தை விருத்தி செய்துகொண்டு கெடுகிறார்கள். இவர்களின் கதியை என்னென்று சொல்லுவது. முதலில் ஒவ்வொருவரும் தங்கள் மதமென்ன வென்றும், அதிற் கூறிய விஷயங்கள் என்னவென்றும் அறிந்து அதிற்சொல்லியவண்ணம் திவ்வியமான அனுஷ்டானங்களை அனுஷ்டித்துப் பிறகு உண்மையை அறியவேண்டும். அதைச்செய்யாமல் கடவுள் உண்டென்பது எப்படி, உலகம் பொய்யா மெய்யா என்று பல கேள்விகளைக் கேட்டு, வீண்வாதஞ் செய்தலின் என்ன பயன் ? உலகம் பொய்யா மெய்யா என்பது ஒரு பெருங்கேள்வி யென்று அனேகர் நினைக்கிறார்கள். இதை ஒரு கேள்வியாகப் பெரியோர் கருதார் . உலகம் பொய்யானாலென்ன, மெய்யானாலென்ன, அதை யறிவதால் 'நமக்குண்டாகும் பயனென்ன, உலகத்தில் சுகதுக்கங்க ளிருக்கின்றனவென்றும் அவைகள் அநித்தியமான அற்பசுகங்களென்றும் ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆதலின் உலக சிற்றின்பத்தை யொழித்து, நித்தியானந்த மடையவேண்டுமானால் உலக ஆசைகளைத் துறப்பது நன்று. இவ்வாசைகளை மறப்பது அவசிய மென்றேற்படும்போது உலகம் பொய்யா யிருந்தாலென்ன அல்லது மெய்யாயிருந்தாலென்ன. கடவுள் உண்டாவெனின், சிலர் இல்லை யென்றும், பலர் உண்டென்றும் வாதிக்கத் தொடங்குவார்கள். பிரம்மம் உண்டா வெனின், அதைக்கண்டது யார் என்று சிலர் சொல்லுவார்கள். ஆனால் ஒவவொருவரும் தானுண்டா வென்பதைப்பற்றிச் சந்தேகிப்பதில்லை. இஃதென்னபேதமை. இந்த உலகமே சாசுவதமெனத் தருக்கித்திரியும் அற்ப மானிடாகேள் ! உன்வாழ்வில் தான் அற்ப சுகங்களும் துன்பங்களு மெத்தனை. ஆ ஹா ! உன் வாழ் நாள் முழுதும் பெரிய மல்யுத்தம். இந்த உலகம் உன்னைப் போல் எத்தனையோபேரைக் கண்டிருக்கின்றது. சீ சீ, நீ அதை இச்சிப்பது வீணே, அதன் சரித்திரம் பயங்கரமானது. அதன் வியாபகம் ஒரு சித்தசுத்தியுள்ள புருஷனிடத்தில் விளங்கும். வயிறார உண்பதும் உடுப்பதும் நமக்கு ஏற்பட்ட தொழிலென நினைந்து வாழ்நாளை வீணாளாய்க் கழிக்கும் பேதமையாளருமிருக்கிறார்கள். இவர்கள், பணமே தமக்கு சுகிர்தம் கொடுக்கக்கூடியதென்றும், பொருளில்லார்க் கின்பமில்லை யென்றும், கல்லானேயானாலும் கைப்பொருள் வேண்டுமென்றும், தம் வாழ்நாளெல்லாம் பொருளொன்றையே நாடி, தேடி வைத்த பொருளால் ஒருவித பிரயோஜனமில்லாமலே தேகவியோக மடைந்தவர் பலர். நிற்க: சில தினங்களின் முன்பு பிரயாகையிலே ஒரு அர்த்த சாஸ்திர சபையாரின் முன்பு, ஸ்ரீமான் காந்தி, "பொன்னைக் காட்டிலும் அதிக உண்மை காட்டவேண்டும். அதிகாரத்தைக்காட்டிலும் அதிகதீரம். சுயநலத்தைக் காட்டிலும் அதிக ஈகைவேண்டும். நமது வீடுகளையும் அரண்மனைகளையும் கோயில்களையும் பணக்கோலம் குறைவாகவும் குணக்கோல மதிகமாகவும் விளங்கச் செய்வோமானால் நம்மிடத்தில் பாரமான சைந்நியமில்லாமலே எதிர்த்துவரும் சேனைக் கூட்டங்களை தடுக்கலாம்" என்று சொல்லியிருக்கிறதைச் சிந்தித்து ஒழுகவேண்டும். நன்குணர்ந்த சிலரும் பணத்தின் ஆசையை மறவாமை பேதமையிலும் பேதமையே. இத்தகையாரையே நம் தெய்வப்புலவர்

" ஓதி யுணர்ந்தும் பிறர்க் குரைத்துந்
தானடங்காப் பேதையிற் பேதையாரில் "

எனக்கூறியுள்ளார்.

---

## பக்தி.

இவ்வுலகின் கண் மானிடராய்ப்பிறந்த நாம் எல்லோரும் மானிடஜென்ம மானது விசேஷமானதென்று அறிவோம். ஆனால் இத்தகைய மானிட ஜென்மம் பெறுவதற்கு எவ்வளவு கஷ்டமும் நேமமும் இருக்கிறதென்றும், எவ்வளவு ஸ்ரமசாத்தியமானது, துர்லபமானதென்றும் நம்மில் சிலரே அறிவார். ஆகையால் இத்தகைய முக்யமான விஷயத்தைப்பற்றி தெரிந்தவரையில் சற்று கூறுவோம்.

மனிதனைப்போல் நூறுமடங்கு பலம்கொண்ட யானையைப்பார்க்கிலும், அவ் யானையின் மத்தகத்தைப் பிளந்துகொல்லும் மிருகேந்திரனைக்காட்டிலும் அம்மிருகேந்திரனையும் தன்வாயால் இழுத்துவிழுங்கும் முதலையைப்பார்க்கிலும் மனிதன் யாதுகாரணத்தால் விசேஷமாக கூறப்படுகிறான் எனில், பகுத்தறிவு விவேசனசக்தியாகிய இவைகளினால்தான். ஏன் எனில் மற்றெந்தப் பிராணி யிடத்திலும் இல்லாததாகிய பகுத்தறிவு, இது பாபம் இது புண்யம், நன்மை தீமை, ஸத்யா ஸத்யம் முதலியனவும், விவேசனசக்தி, இது செய்யத்தகுந்தது இது செய்யத்தகாதது என்பதான அறிவும் மனிதனிடத்தில்தான் பொருந்தி இருக்கிறது. ஆகில் இத்தகைய மானிடசரீரமோ நமக்கு முதல் முதலில் கிடைக்கக்கூடியதாய் இருக்கவில்லை. மண்ணாகிக் கல்லாகி புல்லாகிப் பூண்டாகி செடியாகிக் கொடியாகி மரமாகிப் பின் ஊர்வன நகர்வன பரப்பன நடப்பன நாற்கால் ஜந்துவாகிப் பிறகு கொஞ்சம் அறிவுடன்கூடிய மனிதஜன்மாவை அடைகிறோம். இத்தகைமை அருமைபொருந்திய மானிடஜன்மம் எடுத்த நாம் யாதுசெய்தல்வேண்டும்? ஆகாரத்தைப் போதுமான அளவு தின்றுவிட்டுப் பின் நித்திரைசெய்தால் போதுமானதா? இல்லை; ஏனென்றால் இக்காரியத்தைக் கேவலம் மிருகங்களும்செய்கின்றன. மிருகத்திலும் அதிகமேன்மைபெற்ற மனிதன் செய்யவேண்டியது எவ்வளவோ அதிகமானதாகவும் அபாரமானதுமாக இருக்கிறது. முதலில் அவனுக்கு முக்கியமாய்ப் பொருந்தி இருக்கவேண்டியதுபக்தி. பக்தியானது அரிதாகிய மோக்ஷவீட்டை எளிதில் அடைவதற்கு முக்ய சாதன மாக இருக்கிறது. இத்தகைய பக்தியானது, அஹிம்சை, ஜீவகாருண்யம், தர்மம், தானம், தயை, பிரதி எதிர்பாரா பரோபகாரம், நன்றி, நல்லொழுக்கம், நல்லோருறவு எல்லோரையும் ஸமமாய்ப்பார்ப்பதாயும் சுத்தமானதுமான இவைகளின் மூலமாய்வருகிறது. இவை ஹிருதய சுத்தத்தா லமைகின்றன. இக்குணங்கள் பொருந்தி இருக்கிறது மானிடர்க்கு இயற்கையாய் இருப்பதால்தான் மனிதன் சிறப்புற்றுகூறப்படுகிறான். ஜகமெல்லாம் புகழ்பெற்றோங்கிய ஔவைப்பிராட்டியாரும் அவர் அருளிய அற்புதப்பாடல்கள் ஒன்றில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்.

"அரியதுகேட்கின் வரிவடிவேலோய், அரிதரிது மானிடராதலரிது, மானிடராயினும் கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தலரிது; கூன் குருடு செவிடு பேடு நீக்கிப் பிறந்தனரேயாயின், கல்வியும் ஞானமும் கற்றலரிது; கல்வியும் ஞானமும் தான் கற்றவராயின் செல்வமும் சிறப்புந்தான்பெறலரிது; செல்வமும் சிறப்பும் தான் பெற்றவரேயாயின் தானமும் தவமும் செய்தலரிது ; தானமும் தவமும் செய்தனரே யாயின் வானவர்நாடு வழிதிறந்திடுமே."

பக்தியானது அதிகரிக்க காமக்ரோதாதிகளான பதின்மூன்று குணங்களும் அவனைவிட்டகலுகின்றன. கல்லிலும் கடினமான இம்மனம் நவநீதம்போல் உருகும் தருணமே பரிபக்குவமான நிலைமையின் அறிகுறி. பரிபக்குவமான அம்மனோநிலைமையை அடைந்த அம்மனிதன் மெய்யான அகத்துறவரத்தைக் கொள்ளுகிறான். (தொடரும்)

---

## மனதின் மர்மம்.

மனதிற்கு மனதே சாக்ஷி என்னும் பழமொழி பலர்சொல்லிவருவதை நாம் கேட்டு வருகிறோமல்லவா ? இவ்வரிய வாக்கின் உண்மைக்கருத்தைச் சற்று ஆராய்வது நலமே ஆகும்.

ஒருவனைப்பற்றி நாம் எவ்வித அபிப்பிராயப்படுகிறோமோ அவ்விதமே அவனும் நம்மைப்பற்றி அபிப்பிராயப்படுவான் என்பது நிச்சயம். அவனை நல்லவனென்று நாம் நினைத்தால் அவன் நம்மையும் நல்லவனென்று நினைப்பான். தீயவனென்று எண்ணினால் அவனுடைய எண்ணத்தினால் நாமும் கொடியவனாகவே மதிக்கப்படுவோம். இது இயற்கைவிதி. அனுபவத்தில் காணலாம். ஆகவே ஒருவன் நம்மை எவ்வாறு மதிக்கிறான் என்பதை அறியவேண்டின் அவன்மீது நமதுணர்ச்சி எவ்வாறாயிருக்கிறதென்பதால் அறியக்கடவோம். இது யுக்திக்குப் பொருத்தமான அபிப்பிராயமென்றும் எளிதிற்றோன்றும்.

நாம் ஒருவனுக்கு நன்மையே செய்துவந்தால் அவனும் நமக்கு நன்மையே செய்வான் என்பதும் மற்றுந்தீமையேசெய்தால் அவனும் தீமையே செய்வான் என்பதும் யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயமே. இனி ஒருவனைக்கண்டமாத்திரத்தில் முகமலர்ந்து இன்சொல்லியம்பி உபசரித்திடும் பக்ஷத்தில் அவனும் நம்முடன் இனிமையாக வார்த்தையாடுவதும் அவனைப்பார்த்தவுடன் சீறிச் சினந்துபேசினால் அவனுக்கும் நமக்கும் பெருங்கலகம் உண்டாகுவதும் அனுபவத்தில் காணலாகுமன்றோ ? ஆகவே மனம் வாக்கு காயம் என்னும் திரிகரண சம்பந்தத்தில் செய்கைக்குத்தக்க செய்கையுண்டாகுமென்றும் வாக்குக்குத்தக்க வாக்கு எதிர்பார்க்கப்படுமென்றும் அனுபவத்தால் அறிந்து வருகிற யாம் மனதின்கண் உதிக்கும் எண்ணத்திற்கேற்ப எண்ணமும் உண்டாகுமென்று ஊகிக்கக்கூடுமல்லவா ?

உச்சினிமாபுரியில் அரசாண்டுவந்த விக்கிரமாதித்தமன்னனும் அவனது அருமை யமைச்சனாகிய பட்டியும் இராஜதானிக்கு அருகாமையிலுள்ளதோர் வனாந்தரத்தில் மாறுவேடம்பூண்டவர்களாய்ச் சஞ்சரிக்குங்காலத்தில் ஒருநாள்

கொடுவெயில் வேளையில் நூறாண்டும்கடந்த வயதும் தளர்ந்த நடையும் உடையவ னாய்த் தாங்கமுடியா விறகுச் சுமையொன்றைத் தலையிலேற்றிக்கொண்டு குன் றிக்குன்றி தள்ளாடிவருவதோர் ஏழையைக் கண்ணுற்று அரசன் மனம்வருந்தி இரக்கமுற்றுத் தனது அமைச்சனை நோக்கி "தோழ! இவ்வேழை படுந்துன் பம் ஆற்றொணாததே. ஐயோ என்செய்வேன். நமது ராஜாங்கத்திலும் இத் தகையஏழைகளும் உளரோ? அந்தோ! அந்தோ!" என்று மனவருத்தமுற்றான். இது சொல்லிச் சிறிது நேரத்திற்குள் பக்கத்தில் நெருங்கிய அவ்விறகுவெட் டியைநோக்கி அமைச்சன், "அப்பா உனக்கு உச்சினிமாபுரிதானோ," என வினவ அவனும் ஆம் எஜமானே என்று நின்றான். உடனே அமைச்சன் அப்படி யானால் நேற்றிரவு அரண்மனையில் ஏதேனும் விசேஷமுண்டோ? என்று கேட்க, ஐயா, யாதொன்றுமில்லை என்றான். பின்னும் அமைச்சன், அப்பா, எங் களுக்கு நிச்சயமாகத்தெரியவில்லை வதந்திதான். நேற்றிரவு மன்னன் விக்கிர மாதித்தன் இறந்துபோனானும் என்றனன். இவ்வார்த்தைகளைக்கேட்ட நிமி ஷமே விறகுவெட்டியானவன் தன்னுடைய சுமையுடனே கீழேவிழுந்து அழுது புரண்டு, ஐயோ என்னசெய்வேன், எனது சக்கிரவர்த்தியைப்போல் இனி இந் நாட்டையும் குடிகளையும் யார்தான் ஆதரிப்பர்! ஐயய்யோ! என்னகுணம் என்னபொறை!! என்ன அன்பு!!! தெய்வமே எனதாவியும் கொண்டு போகாயோ!!!! எனப் பலவாறு தேம்பித் தேம்பி ஓவென்று அழுது ஓலமிட் டான். இதைப்பார்த்த மந்திரி அப்பா, வருந்தாதே, எனக்கு நிச்சயமாகத் தெரிய மாட்டாதே. ஏதோ ஒரு வதந்தி என்று தானே சொன்னேன். இன்னும் தீர விசாரிப்பதற்குமுன் வருத்தப்படுகிறாய். அனேகமாக நாங்கள் கேள்விப்பட்ட தும் பொய்யாகவே இருக்கலாம் என்று சொல்லி ஏழையைத்தேற்றி தெளி வித்து அவ்விடம் விட்டகன்றனர். அரசன் அமைச்சனைநோக்கி அவ்வேழை யுடன் அவ்வாறு சம்பாஷிப்பதற்கு காரணம் யாதென்று வினவ அமைச்சன் மறு மொழி யளிக்குமுன் இருவரும் நடந்துவரும் அவ்வொற்றை யடிப்பாதையில் ஓர் தயிர்ப்பானையைத் தலையிலேந்திவரும் இடைப்பெண்ணொருத்தியை அரசன் கண்ணுற்றான். உடனே அமைச்சனைப்பார்த்து, தோழ! எதிரில்வரும் இவ் விடைச்சியின் ஒய்யாரநடையைப் பார்த்தனையா? தனக்கெதிரில் இரண்டு ஆண் பிள்ளைகள் வருவதாகவா எண்ணிநடக்கிறாள்? பாதையைவிட்டு அந்நாய் வில கிப்போகக்கூடாதா? அப்பைசாசத்தின் ஊர் பெயரை விசாரித்துக்கொண்டு நாம் இராச்சியத்திற்குப் போனவுடன் அவளை வருத்தி அவளுக்குச் சரியானதண் டனை விதிக்கவேண்டும் என்று சொல்லவும் அப்பெண் சமீபத்தில் வந்துவிட் டாள். அமைச்சன் அப்பெண்ணைப்பார்த்து நீ எங்கிருந்து வருகிறாய் என, அவள்முகங்கோணி உன்னை யார்கேட்கச்சொன்னது. நான் எங்கிருந்துபோனால் உனக்கென்ன உன்வேலையைப் பார்த்துப்போ என்றாள். பின்னும்பட்டி, அம் மணி, உச்சினிமாபுரியில் மன்னன் விக்கிரமாதித்தன் இறந்ததாக நீ ஏதாயினும் கேட்டாயோ என்றான். அதற்கவள் மிகவும் அலக்ஷியமாய் அந்தக்கழுதை போனால் இன்னொரு கழுதைவருகிறது. உனக்கென்ன எனக்கென்னபோ

என்று சொன்னாள். இதைக்கேட்டவுடன் அரசன் மிகுந்தகோபமடைந்தான். அமைச்சன் மன்னனைச் சாந்தப்படுத்தி, மன்ன! தாங்கள் என்னிடம் சற்று முன் கேட்டகேள்விக்கு இனியும் பதில் உத்தரம் வேண்டுமோ? தங்களுடைய மனதில் அவ்வேழை விறகு வெட்டியின்மீது கருணையும் இரக்கமும் ஜெனித்த தால் அவனுக்கு தங்கள்மீது அன்பும் விசுவாசமும் உண்டாயின. இடைப் பெண்ணைப்பற்றி தாங்கள் கேவலமாக நினைத்ததனால் அவளுடைய மனதிலும் அவ்வாறே தங்களைப்பற்றி எண்ணம் உதித்தது. இது இயற்கை விதியன்றோ? கோபம் தணிக என்றான். ஆனதினால் நாமனைவரும் நல்ல எண்ணத்துடனும் பரோபகார மனதுடனு மிருப்போமாக.

---

## 'எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்'

உலகத்தில் மானிடராய்ப் பிறந்த யாவருக்கும் கல்வி அத்யாவசியம். ஒரு வன்கணிதசாஸ்திரத்திலும், இலக்கணத்திலும் தேர்ந்திருப்பானேயாகில், அவன் சிறந்து விளங்குவான் என்பது திண்ணம். தச்சன் தச்சுவேலையையும், தட்டான் பொன்வேலையையும் இவ்வாறாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலைக் கற்றுக்கொள்ளுகின்றனர். ஆயினும், அவர்கள் அவ்விதங் கற்றுச்சோற்றுத் துருத்தியை யேற்றபடி போற்றுவதிலேயே நாட்டம்வைக்கிறதனால் அத் தொழில்கள் அன்னோர்க்கு இகத்திற்குத்தான் பயன்படுகின்றன வேயன்றி மறு மைக்குப் பயன்படுகிறதில்லை

எண் என்றது ஆண்பெண் என்ற இருபாலார்க்கும் வேண்டியதொன்றாம். வீட்டில் பெரும்பான்மையாகப் பெண்பாலர்க்கு விறகு, தயிர் முதலியவைகள் வாங்கவேண்டிய காலத்தில் இந்த எண் அதாவது கணிதசாஸ்திரம் இன்றியமை யாததென்பதை விளக்க எண் என்று கணிதசாஸ்திரத்தைக் குறிக்குஞ் சொல்லை ஔவையார் முதற் கண் நன்குவிளக்கிய நயம் மிக்க கவனிக்கத்தக்கது.

ஒருசமயம் இலக்கணம் கல்லாதவர்கள் பலரிருப்பினும், அவர் கற்றவர் களைக்கொண்டு காரியங்களை எளிதில் நிறைவேற்றிக்கொள்ளலாம். கணித சாஸ்திரம் கல்லாவிடில் மிக்க கஷ்டமாகும். இஃது இருபாலார்க்கும் மிகப் பொருந்தியதாகும். இதுகருதியே 'எண்ணுமெழுத்து' மெனமுறைப்படுத்தினா ரென்க.

மற்றும் இம்மையிலிருபாலார்க்கும் இன்றியமையாத துணையாயுதவுதலோடு அஃதவசியம் பயிலற்பாலதென்ற குறிப்பை யுள்ளிட்டு 'எண்ணு' மெனமுதற் கண்கூறி இலக்கணத்தின் பெருமையையும், பயனுதற்குள் உள்ள அருமையை யும் நோக்கி அதனையடுத்து 'எழுத்' தெனவுங் கூறிப்போந்தார். எண்ணுமென் பதில் சோதிடம் ஆதிய பிறநூற்களுக்குரிய கணிதப்பான்மையு மடங்கும் 'எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்' என்பதில் என்ற சொல்லாற்றலான் மானிடர்க் குரித்தாயவற்றுள் இவ்விரண்டும் இன்றியமையாது வேண்டப்படும் தகுதிக்குணங்கள் என்பது நன்கு பெறப்படும்.

இவ்விரண்டு விடயங்களையும் மாந்தர் பயின்றிருப்பார்களேயாயின் அவர்

இம்மையில் ஊனக்கண்களின் பயனையே யன்றி ஞானக்கண்களின் பயனையும் அடைந்தாராவர்.

‘ எண்ணென்ப ஏனைஎழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழுமுயிர்க்கு’ என்றார் திருவள்ளுவனாரும்.

---

## “ ஐயமிட்டார் கெட்டார் ?”

(293-ம் பக்கத் தொடர்ச்சி)

“ வையிற்கதிர்வடிவேலோனை வாழ்த்திவறிஞர்க்கென்று
நொய்யிற்பிளவளவேனும் பகிர்மின்கணுங்கட்கிங்கன்
வெய்யிற்கொதுங்கஉதவா உடம்பின்வெறுநிழல்போற்
கையிற்பொருளுமுதவாதுகா ணுங்கடைவழிக்கே ”—

நாமெல்லோரும் நாளும் சாக்ஷாத் வேலாயுதக்கடவுளின் திருவடிகளை வாயாரவாழ்த்தி நம்மிடம்வந்து யாசிக்கும் தரித்திரர்களுக்கு, உள்ள பொருளில் நொய்யைப் பிளவுசெய்தால் ஒருபிளவு எவ்வளவிருக்குமோ அவ்வளவாகிலும், அதாவது, அற்ப அளவேனும் பங்கிட்டுக்கொடுக்கவேண்டும். ஏனென்றால் இப்பூமியின் கண் வெயிலுக்கு ஒதுங்க இடந்தராத நம்முடைய நிழலைப் போன்று, நம் கையிலுள்ள பொருளும் செல்கதிக்கு உதவமாட்டாது.

அந்தோ ! தருமத்திற்கு மேலானது உலகத்தில் வேறு என்ன இருக்கின்றது. தன்னைவந்து யாசித்த அறிஞனுக்குத் தன் உயிரையும் கொடுக்கத் துணிந்தனனன்றோ குமணன் என்னும் அரசன். இவ்விதமிருக்க, ஈகையை மறந்து உலுத்தகுணத்தை மனிதனென்பவன் கொள்ளத்தகுமோ ? புண்ணிய வசத்தால் பொருட்செல்வம் கிடைக்கின்றது. அதைத் தான் அனுபவியாமலும் பிறருக்குக்கொடாமலும், பூதம்போற் பாதுகாப்பதனாற் பயனென்ன ?

“ முன்னரேசாநாண் முனிதக்கமூப்புள
பின்னரும் பீடழிக்கும்நோயுள—கொன்னே
பரவன்மின்பற்றன்மின் பாத்துண்மின்யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம்போழ்து. ”

மரணம் முன்னிற்கின்றது, வெளுப்பிற்குரிய மூப்பும் எதிர் நிற்கின்றது. அல்லாமலும் பெருமையைக் கெடுக்கத்தக்க பிணியும் காத்திருக்கின்றது. ஆகையால் பொருள்கிடைத்தபோது வீணே தற்புகழ்ச்சி செய்துகொள்ளாமலும், அதனைப் பயன்படாவாறு சேமித்துவையாமலும், இரப்போர்க்குப் பகிர்ந்திட்டுண்ணவேண்டும். ஒன்றையும் மறைத்தல்கூடாது.

யாவரும் உச்சிகாலத்திலே பசித்துவந்த ஏழைகளுக்கு, இல்லை என்னாமல் முகமலர்ச்சியோடும், இன்சொல்லோடும், தம்மாலியன்றமட்டும் அன்னபானங் கொடுத்துப் புசித்தல்வேண்டும். தாம் புசிக்கும்போது ஒருபிடி யன்னமேனுங் கொடுத்தல் ஒருவருக்கு அரியதன்று. இது யாவருக்கும் எளிதாகும். பகற் காலத்தில் வந்துயாசித்த அதிதிக்கு அன்னங்கொடாத பாவத்தினும், இராக்காலத்

தில் வந்த அதிதிக்கு அன்னங்கொடாத பாவம் எண்மடங்கதிகம். ஆனால், அது சமயம் தங்களுக்கே புசிக்க அன்னமில்லாம லிருக்கும்போது அதிதியானவர் வந்து யாசித்தால் என்செய்வது? அவருக்கு அன்னங்கொடுக்கத் தமக்கு சக்தி யில்லாவிட்டாலும், அவர்மனத்தை முகமலர்ச்சியினாலும், இன்சொற்களாலும் குளிர்வித்து, இன்னும் அன்னமிட சக்தியுள்ள தாதாவின் மனையைக் காட்டு விப்பதும் தருமந்தான் "செய்யாமற்செய்த உதவிக்கு வையகமும் வானகமும் மாற்றலரிது" என்னும் ஆன்றோர் மொழியும் இங்கொக்கும்.

நாம் இதற்கு, "ஐயமிட்டார் கெட்டார்?" என்னும் தலைப்பினைக்கொடுத்து இவ்விஷயத்தை எழுதிவருகின்றோம். ஐயமிட்டு கெட்டவர் உலகில் ஒருவரு மில்லை. அவ்விதம் தமக்குள்ள பொருள்களெல்லாவற்றையும், உள்ளன்போடும், தன்மனதிற்கு யாதொரு விரோதமில்லாமலும், செலவிட்டு தானும் பரம ஏழை யாய் விட்டாலும், அக்காலத்து எல்லாம் வல்ல இறைவன் அவர்களைக் கைவிட மாட்டார். அவர்கள் உள்ளன்போடு செய்த தருமமே அவர்க ளேழையான காலத்தில் அவர்களுக் குதவிசெய்யும்.

"தோற்றமுற்பவத்திற்செய்த தீங்குநன்கெனுமிரண்டும்
ஆற்றல்சால்கருமமெண்பர் அக்கருமத்தைநோக்கிச்
சாற்றுமிப்பிறப்பில்யார்க்குந் தரித்திரம்செல்வம்நல்கிப்
போற்றுவனுயிரையெல்லாம் பொலிசுடர்த்திகிரிவள்ளல்"

முற்பிறப்பில் செய்த பாவபுண்ணியங்கள் இரண்டுமே மக்கட்கு வலிமை பொருந்திய வினை அல்லது கருமமாகும் எனப் பெரியோர் சொல்லுவார்கள். இது சத்தியம். இவ்வினைகளை அநுசரித்தே பிரஸ்தாபத்திலுள்ள இந்த ஜன னத்தில் யாவர்க்கும் தரித்திரத்தையோ அல்லது செல்வத்தையோ கொடுத்து ஜீவராசிகளனைத்தையும் பாதுகாத்துவருகின்றார் மிக்க ஒளிபொருந்திய சக்க ரத்தையேந்திய சாக்ஷாத் பகவான். இகத்தில் அவரவர்செய்த பாபபுண்ணியத் துக்குத் தக்கபடி மானிடர்செல்வத்தைப் பெருகின்றனர். இன்றைக்கு பிச்சை எடுப்பவனை நாளைக்குச் சீமானாகவும், இன்றைக்குச் சீமானாக இருப்பவனை நாளைக்குப் பிச்சை யெடுக்கவும் காண்கின்றோம். இதற்கு திருட்டாந்தமாக ஒரு சிறியகதையை இதன்கீழ்காண்க:—

தொண்டைநாட்டிலே ஓரூரில் காளத்திப்பிள்ளை யென்றோர் வேளாள ரிருந்தனர். அவர் கல்வி கேள்விகளில் வல்லவராயும், செல்வம் நிறைந்த சீமானாகவும், விளங்கிவந்தனர். அவர் தன் செல்வமுழுவதையும் தன்னை வந்து யாசிக்கும் ஏழைகளுக்கும், வித்வான்களுக்கு மெனக்கருதி தன்னைவந்து யாசித் தவர்களுக்கெல்லாம் சலியாமல் தருமமிட்டுவந்தனர். இவர்கொடுக்கும் கொடை யால் அவ்வூராளும் அரசனுக்கு அவமானமுண்டாய், காளத்திப் பிள்ளையின் செல்வமெல்லாம் பலவித்வான்களைக்கொண்டு கேட்கச்செய்து அழிக்கத்தலைப் பட்டான். அதனால் காளத்திப்பிள்ளையின் செல்வம் நாளுக்குநாள் அழிந்து கொண்டேவந்தது. "அரசனேநினைத்தால் ஆகாததுமுண்டா?"

இவ்விதம் ஒவ்வொருநாளும் அநேகவித்வான்கள் வந்து, பிள்ளையிடம் சில

கவிகளைப்பாடி, அவர் பொருளையெல்லாம் பரித்துச்சென்றனர். கடைசியாக காளத்திப்பிள்ளையின் செல்வமெல்லாமழிந்துவிட்டது. அவரும் அவர் மனைவியும் அன்றாடம் வயிறுவளர்ப்பதற்கே முடியாமற்போய்விட்டது. என்ன செய்வார் பாவம்! அவருடைய சத்திரங்களே அங்கங்கு விளங்கிக்கொண்டிருக்க, அவருக்கு வயிற்றிற்கு இல்லையென்றால் யவர்தான் பரிதாபப்படார். அந்தோ? மிக்க பரிதாபம். அவர் அவ்வூரிலேயே இருக்க மனங்கொள்ளாது, வேற்றூர் சென்று வயிறு பிழைக்கலாமெனக் கருதினார். அவருடைய மனம் ஒரு நிலைமையிலில்லாம லிருந்தது.

ஓர்நாளிரவில் ஒருவருமறியாமல் தன் மனைவியுடன் புறப்பட்டு, சுமார், 10-மைலுக் கப்பாலுள்ள தமது சத்திரத்திற் போய்ப்படுத்திருந்தனர். விடிந்த பின்னெழுந்து வேறெவ்விடமாவது போகலாமென்பது அவர்களுத்தேசம். இவர்களெண்ண மிவ்விதமிருக்க, அருகாமையில் அதாவது இவர்கள்படுத்திருக்கு மிடத்திற்கு 4, 5, கெஜதூரத்தில் சுமார் இரவு 12-மணிக்கு வேற்றூர் பிரயாணியொருவர் மிக்க ஆயாசத்துடன் வந்துபடுத்து, அடியில் கண்டவாறு தாமே பேசிக்கொள்ள வாரம்பித்தார். அதாவது, ஐயோ! தரித்திரம் நம்மை இப்படியும் வருத்தலாமா? நானோ அன்னம்புசித்து நாள் இரண்டாகின்றன. சோற்றிற்கோ வேறுவழியில்லை, நமதுகையில் ஒருகாசுமில்லை, வேளையோ நடுராத்திரி, பசியின்வேதனையால் நித்திரையும் வரவில்லை, நமக்கொரு பிடியன்னம் அளிப்பவர் யாரிங்கிருக்கின்றனர். பொழுதுவிடியுமுன் புறப்பட்டுப்போய், நாளை நம் காளத்திப்பிள்ளை யவர்களைக்கண்டாலொழிய நம்தரித்திரம் நீங்காது.

“ சேவித்தும்சென்றிரந்தும் தெண்ணீர்க்கடல்கடந்தும்
பாவித்தும்பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழினுடம்பை வயிற்றின்கொடுமையால்
நாழியரிசிக்கே நாம்.”

“ நீளத்திரிந்தனையோ நீங்காநிழல்போல்
நாளைக்கென்செய்வாய் நல்குரவே—காளத்தி
நின்றைக்கேசென்றக்கால் நீயெங்கேநானெங்கே
இன்றைக்கே சற்றேயிரு.” என்றார்.

இவ்விதமிவர் புகல்வது பக்கத்தில்படுத்திருந்த பிள்ளையின் காதில் விழுந்தது. அதுசமயம் அவர்மனம் வருந்ினதை யார்தான் கூறவல்லார்? பிறர் வருந்த மனங்கொள்ளாதவர், இரப்பவற்கு தம்முயிரையும் கொடுக்கப் பின் வாங்காதவர், மகா புண்ணியபுருடன், இதுசமயம் என்செய்வார் பாவம், மனம் நொந்து மனைவியை மெள்ள எழுப்பி, கேட்டனையா இவர்படும் வருத்தத்தையும், அவர்பாடிய கவிகளையும்? இவ்வித்வான் நம்மைநாடிப் போகின்றார் போலும். இவரவ்விடம் போகுமுன், நாம் முன்னாடி நம்மனைக்கேகி, அவருக்கு வேண்டிய உபசாரணைகளை செய்தனுப்ப வேண்டுமென மொழிந்து, அப்பொழுதே அவ்விடம்விட்டு தனதில்லம் சேரப் புறப்பட்டனர்.

" ஆற்றுப்பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்காலுல கூட்டும்—ஏற்றவர்க்கு
நல்லகுடிப் பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து. "

உயர்ந்த குடியிற் பிறந்தவர்கள் வறுமைகாலத்திலும் இரந்தவருக்குக் கொடாது விடார்.

" கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே
சங்குசுட்டாலும் வெண்மைதரும் "

என்றபடி ஜீவகாருண்யத்தையே மேற்கொண்ட நமதுபிள்ளை யவர்கள் வீடு சேர்ந்து பொழுதுவிடிந்ததும், தனதில்லாளைநோக்கி, இன்னுமிரண்டொரு நாழிகையில் வித்வான் வந்துவிடுவரே அவர்மனத்தை திருப்திசெய்வித்தனுப்ப நம்மிடம் ஒரு பொருளுமில்லை, கடவுள் எவ்வழிவிடுவரோ அறியேம் எனவருந்துவாரானார். என்செய்வார் அவ்வம்மையார் பர்த்தாவிற்கேற்ற பதிவிரதையாதலால், கழுத்தில் தாலியைத்தவிர மற்றவையெல்லாம் தருமத்தில் செலவிடப்பட்டன. நின்றது தாலி ஒன்றே. இப்புண்ணியவதி கிஞ்சிற்றும் மனம் கோணாது, தன் தாலியைக்கழற்றி தன்பர்த்தாவிடமீந்து, காய்கறி அரிசி முதலியன வாங்கிவரச் செய்து அன்னம் சமைத்து வித்வான்வரவை எதிர்பார்த்திருந்தனர். வித்வானும் வந்தார். அவரை இருவரும் எதிர்சென்றழைத்து, இன்சொற்களால் உபசரித்து, ஸ்நானம்செய்வித்து சாப்பாடும்முடிந்தது. வித்வானும் பிள்ளையவர்களும், கூடத்தில் வந்துட்கார்ந்து, தாம்பூலம் தரித்துக்கொண்டார்கள். பின்னர் வித்வான், காளத்திப்பிள்ளையவர்கள்பேரில் பலகவிகளைப்பாடினார். காளத்திப்பிள்ளை என் செய்வார் பாவம், வித்வானுக்கு மரியாதை செய்தனுப்ப தன்னிடம் ஒருகாசுமில்லை. உடனே வித்வானிடம் சிலநிமிஷங்களில் வருவதாய் சொல்லிவிட்டுப் போய், ஓரிடத்தில் தனிமையாய் உட்கார்ந்து யோசிக்கின்றார். தன்மனதிற்குள் இதுசமயம் நாமென்னசெய்யலாம், இவரோ நம்மை நாடிவந்துவிட்டனர். தரித்திரத்தால் மிக்க மெலிந்தவராய்த் தோன்றுகின்றது. நம்மிடமோ ஒன்றுமில்லை. இல்லையென்று அவரை சும்மா அனுப்புவதும்கூடாது. அதைவிட நம்முயிரை விட்டுவிடுவதே நலமெனக்கருதி, தம்முயிரை எவ்விதம் போக்கலாமென யோசித்துக்கொண்டிருந்தனர். வித்வானோ குறைந்தது நம்காளத்திபிள்ளையவர்கள், நூறுவராகனுவது தருவாரெனமதித்து, சந்தோஷமாய் உட்கார்ந்துகொண்டிருக்கின்றார்.

உயிரைப்போக்க எண்ணியபிள்ளையவர்கள், சரேலெனப் புறப்பட்டுபோய் ஒருநாகசர்ப்பத்தின் புற்றில் கையை நுழைத்து, "ஏ நாகமே! நான் பரம ஏழையாய்விட்டேன். இல்லையென வந்திரப்போர்க்கு இல்லை என்னும் ஏழ்மையிலிருப்பதைப் பார்க்கிலும், இறந்துவிடுவதேநலம். நீ தயவுசெய்து என்னைக் கடித்துக்கொன்றுவிடுவாயானுல் என்துன்பமெல்லாம் இன்றுடனொழியும்" எனக் கதறினார். உடனே அவர்கையில் ஏதோ ஒன்றிருப்பதாய் தெரிந்து கையை மேலே எடுத்தார், அவர் கையிலிருப்பது ஒரு நாகரத்தினமெனக் கண்டானந்தித்தார். தன்னைநாடிவந்த வித்வசிரோன்மணிக்கு பொருள்கிடைத்து

விட்டதென சந்தோஷத்துடன் ஓடோடியும்வந்து, அந்நாகரத்தினத்தைத் தாம் பூலத்தில்வைத்து அவருக்கு பரிசளித்தார். அந்தோ! வித்வானின் களிப்பிற் களவேது, அவர் இரவுபேசியபடி தரித்திரம், நீ யெங்கே நானெங்கே என்று பறந்துபோய்விட்டது.

வித்வான் இந்நாகரத்தினத்தை இவ்வூரில் சாமான்னியர்கள் வாங்கமாட்டார்களெனக்கருதி, அவ்வூராளும் அரசனிடம்கொண்டுபோய் விலைகூறினர். அரசன் இஃதேதென, இவை காளத்திப்பிள்ளையின் பரிசெனப்புகன்றார். உடனே அரசன், ஓகோ! இன்னும் இவ்வாறான பெரும் பரிசுகளைத் தரத்தக்க நிலைமையில் இருக்கின்றானோ காளத்தி? அவன் வயிற்றுக்கில்லாமல் ஏழ்மையான 'நிலையில் இருப்பதாயன்றோ நான் கேள்விப்பட்டேன். அப்படிக்கிருக்க, இந்நாகரத்தினம் அவனுக்கேது. நமதரண்மனையில்வந்து திருடினான்போலும் எனமொழிந்து வித்வானை சிறையிலடைத்துப் ஆட்களையேவி காளத்திப்பிள்ளையவர்களை பிடித்துவரச்செய்தும் விசாரிக்கலாயினன் " கோடுங்கோன் மன்னர் வாழுநாட்டிற் கடும்புலிவாழுங்காடு நன்றே." நமதுபிள்ளையவர்கள் தமக்கு நாகரத்தினம் கிடைத்த விதத்தைச் சொன்னார். அரசன் நம்பாமல், அவ்விதமுனக்கு நாகம், ரத்தினத்தைத் தந்ததென்றால், இன்னோர்முறைப்போய் அதின் ஜீவரத்தினத்தைக்கேட்டு வாங்கிவருவாயாக. அதன்முன் உன்னை நம்புவது கூடாது என்றார்.

ஐயோ! என்னே அரசனின்கொடுமை, நாமிருப்பதைவிட இறப்பதே மேல் என்று, அப்பாம்பு புற்றிடம்போய், ஓ நாகமே! இம்முறையாவது தயவு செய்து என்னைக் கடித்துக் கொன்றுவிடுவாயாக. அரசன் ஜீவரத்தினத்தைக் கொண்டு போனாலொழிய விடான். இவ்வுயிர் இனி இருந்தென்ன இறந்தென்ன, என்று தம்கையைப் புற்றில் நுழைத்தார். அப்பொழுதே, தன்கையில் முன்போல் ஒன்றிருக்கக்கண்டு மேலெழுந்துப் பார்த்தார். அது ஜீவரத்தினமாயிருக்கக்கண்டு, அரசனிடம்கொண்டுகொடுத்தார். அரசன் இதைக்கண்டு வெட்கமும் அவமானமுமடைந்து, நமதுபிள்ளையவர்களிடம் பேசவும் நாவெழாது, அச்சத்துடன் அவரைக் கைகூப்பி, நீ யன்றோசெல்வன், உன்னைவிட ஜீவகாருண்யமுள்ள செல்வன் உலகில் உண்டா? உனக்கு நானும் என்னைப்போலொத்த இன்னும் பலரும் இணையாகார். உன்னைப் பரம ஏழையாகச் செய்ய நானே காரணமாயிருந்தேன். என்னை மன்னிப்பாயாக. தவிரவும் உனக்கு வேண்டியசெல்வத்தை உன்னிருப்பிடத்திற்கு என் ஆட்களைக்கொண்டு அனுப்பியிருக்கின்றேன். தயவுசெய்து என்மீது கருணைகொண்டு, அச்செல்வங்களைத்தும் பெற்றுக்கொண்டு, பழயபடியே உன் கொடைத் தொழிலைச் செய்வாயாக. இன்னும் உனக்குவேண்டிய பொருளுதவியைச் செய்கின்றேன். நான் உனக்குச் செய்தகொடுமைகளை மனதில் வையாமல் என்னை க்ஷமித்தருளவேண்டும், என்று பலவாறு வேண்டிக்கொண்டான். வித்வானுக்கும் வேண்டிய பொருளுதவி செய்தனுப்பினன்.

நம் பிள்ளையவர்களின் ஜீவகாருண்ய தருமசிந்தை, அவருக்கு இடையூறு

வந்தகாலத்து எவ்வளவு அநுகூலத்தைக்கொடுத்தது பாருங்கள். "ஐயமிட்டு யார் கேட்டார்?" ஒருவருமில்லை. ஆனதுபற்றி ஒவ்வொருவரும் தம் பொருளிற் கேற்பத் தருமமிடமுயலவேண்டும். நாம் இம்மானிட ஜன்மமெடுத்ததற்கு, இத் துணைச் சிறப்பினதாகிய புண்ணியத்தைத் தேடுவதேதான் உத்தமம்.

---

## இயற்கைப் பொருட்பாடம்-வானசாஸ்திரம்.

(206-பக்கத் தொடர்ச்சி)

(1) கிரகங்கள் சூரியனைச் சுற்றிவருகின்றன வென்பதை முன்னமே அறிவித்திருக்கிறோம். அவைகளை சூரியனுடைய குடும்பம் என்றே சொல்ல லாம். ஏனெனில் அக்கிரகங்கள் சூரியனைவிட்டு சற்றேனும் பிரியாமல் எப்பொ ழுதும் சுற்றிக்கொண்டே யிருக்கின்றன. சந்திரன் பூமியை மாதத்திற்கு ஒரு தரமும், பூமி சூரியனை வருடத்திற்கு ஒருதரமும் சுற்றி வருகின்றன.

(2) சந்திரனுடைய கலையானது ஒவ்வொரு மாதத்திலும் அனேக மாறு தல் அடைகின்றது. இக்கலை சிலநாட்கள் குறைந்தும் சிலநாட்கள் அதிகரித்தும் வருகின்றது. வளர்ந்துகொண்டே வரும்போது வளர்பிறை என்றும், தேய்ந்து கொண்டே வரும்போது தேய்பிறை என்றும் இதைச் சொல்வது வழக்கம். சந் திரனுக்கு சுய ஒளி என்பதே கிடையாது. இது தன் ஒளியைச் சூரியனிடத்தி லிருந்தே பெருகின்றது. சந்திரன் பூமியைச் சுற்றுவதினால்தான் வளர்பிறை தேய்பிறை என்பவை உண்டாகின்றன. இதைக் கீழ்வரும் உதாரணத்தால் ஒரு விதமாய் அறியலாம். ஒருமெழுகுவத்தியைக் கொளுத்தி மேஜைமூலையில் வைப்போம். ஒருவன், மேஜையின் மற்றொரு மூலையில் மெழுகுவத்திக்குநேரே நிற்கவும் வேறொருவன் இவை நடுவில் ஒருபந்தைப்பிடித்துக்கொண்டு நிற்பதாக வும் வைத்துக்கொள்வோம். மெழுகுவத்தியைச் சூரியனுக்கும் மனிதனுடைய தலையை பூமிக்கும் பந்தைச் சந்திரனுக்கும் ஒப்பாக வைத்துக்கொள்வோம். இப் பொழுது சூரியனாகிய மெழுகுவத்தியினுடைய வெளிச்சம் சந்திரனாகிய பந்தின் மேல் பிரகாசிக்கின்றது. எவ்விதம் சந்திரன் பூமியையும், பூமி சூரியனையும் சுற்றுகிறதோ, அதேமாதிரியாய் மேசையின் மூலையில் நிற்கும் மனிதன் மேசை யைச் சுற்றிலும் நகர்ந்துகொண்டே யிருக்கவும். பந்தைப் பிடித்துக்கொண்டிருக் கும் வேறொருவன் அப்பந்தை மெதுவாய் அம்மனிதனுடைய தலையை சுற்றி லும் சுற்றிக்கொண்டே யிருக்கவும், நகர்ந்து செல்லும் முதல்மனிதன் எப்பொ ழுதும் பந்தை பார்த்துக்கொண்டே செல்லவேண்டும். இவ்விதம் செல்வானாகில் அவனுக்கு பந்தினுடைய ஓர் பாதிபாகம் மட்டும் தோன்றும். ஒருபாதி சூரியனை நோக்கி யிருப்பதால் ஒளி பொருந்தியதாகவே காணும். மற்றொருபாதி வெளிச்ச மற்றதாகவே தோன்றும். இவைகள் இப்படியே யில்லாமல் மாறிக்கொண்டே வரும். சந்திரனாகிய பந்து சுற்றும்போது மனிதனுக்குச் சில சமயங்களில் பிர காசமாயிருக்கும் பாகத்தில் சிறிது பாகம்மட்டும் தோன்றும். சிலபோது ஒன் றுமே தெரியாது. அதாவது, அவனால் ஒளியாயுள்ள பாகத்தைப் பார்க்க முடியாது. இதற்கே அமாவாசை என்று பெயர். அமாவாசைக்குப் பின் வரும் மூன்றாம்நாள் சந்திரனை ஒளியுடன் மிகச் சிறிய பிறையாய் மேற்குத் திக்கில் காணலாம். இதையே ஜனங்கள் மூன்றாம் பிறை எனச் சொல்வார் கள். சந்திரன் சிறிது சிறிதாகவளர்ந்து பதினைந்தாம்நாளிரவில் கிழக்கில் பூர்ண மாயும் மனதைக் கவரத்தக்க ஒளியிருந்தும் உதிக்கக்காண்போம். இதற்கு பௌர்ணமி என்று பெயர். மறுபடியும் இதற்குப் பதினைந்தாம் நாள் அமா வாசை உண்டாகிறது. இதனால் நாமறியக்கூடியதாவது சந்திரன் பூமியைச்

சுற்றுவதினால் அமாவாசையும் பௌர்ணமியும் உண்டாகின்றன வென்பதே. கிரகங்களுள் வெள்ளி அல்லது சுக்கிரன் என்பதும், புதன்என்பதும் சூரியனைச் சுற்றினபோதிலும் சந்திரனைப்போலவே இவைகளின் உருவங்களும் குறைந்தும் அதிகரித்தும் வருகின்றன.

(3) நாம் தூரதிருட்டிக் கண்ணாடியின் உதவியால் சந்திரனைப் பார்ப்போமாகில் அது ஒரு மலைநிறைந்த பிரதேசம்போல் தோன்றும். அம்மலைகளை உற்றுநோக்கில் அவைகள் ஒருகாலத்தில் எரிமலைகளாக இருந்திருக்கக்கூடுமென்று ஊகிக்கப்படும். உண்மையில் இப்பொழுது சந்திரனிடத்தில் எரிமலைகள் கிடையாது. சந்திரனிடம் மலைகள் நிறைந்திருப்பதால் மனிதர்கள் வசிப்பதற்கேற்றது என்று நினைக்கவும் கூடும். மனிதர் வசிப்பதற்கு இன்றியமையாதவை ஜலமும் சுத்த ஆகாயமுமே. சந்திர மண்டலத்தில் இருக்கும்படியான மலைகளைப் பார்க்கில் அவைகளில் ஜலம் இருந்ததாகவே புலப்படவில்லை. இது எப்படி யெனில் நாம் பூமியிலுள்ள ஒரு மலையைப் பார்த்தால் அதில் ஜலம் ஓடியிருக்க வேண்டுமென்றும இல்லை யென்றும் எளிதில் சொல்லக்கூடும். ஆழ்ந்து பரிசோதித்ததில் சந்திரனுடைய மலைகளில் ஜலம் என்பதே கிடையாது என்று தெரிகிறது. பூமியிலிருந்து சந்திரன் 240,000 மைல் தூரத்திலிருப்பதால் அங்கே காற்று என்பதே கிடையாது. எப்பொழுது ஜலமும் காற்றும் இல்லையோ, அங்கே மனிதர்கள் வசிப்பது அரிது என்று கூறவும் வேண்டுமோ!

(4) கிரகங்களுள், வெள்ளி அல்லது சுக்கிரனுக்கும் புதனுக்கும்தவிர மற்ற கிரகங்களுக்கு உபகிரகங்கள் உள. செவ்வாய் அல்லது அங்காரகனுக்கு இரண்டு உபகிரகங்களும், வியாழன் அல்லது பிரகஸ்பதிக்கு ஐந்தும், சனிக்கு எட்டும், யுரானஸ் என்னும் கிரகத்திற்கு நான்கும், நெப்ட்யூன் என்பதற்கு ஒன்றும் உண்டு. இவ்வுபகிரகங்களில் சில சந்திரனைவிட பெரியதாயிருக்கின்றன. சில 3,030 மைல்கள் குறுக்களவுடன் கூடின. சில புதனைக்காட்டிலும் 4,230 மைல்கள் குறுக்களவுடன் கூடியவை. மற்றும் சில அங்காரகனிலும் பெரியதாயுள்ளன.

(5) எவ்விதத்தில் சூரியனுடைய ஒளி பூமியைச் சுற்றிவரும் சந்திரன் மேல் பிரகாசித்துச் சந்திரனுக்கு ஒளியின் நிறைவையும் குறைவையும் உண்டாக்குகின்றதோ, அம்மாதிரியே தன்னைத்தானே சுற்றும் பூமியின்மேல் பிரகாசிப்பதால் அதற்கு வசந்தகாலம், வேனிற்காலம், இலை யுதிர்காலம் ,கார்காலம் என்னும் ருதுக்களை விளைவிக்கின்றது. இவ்வாறு ஏற்படும் ருதுக்களில் கார்காலத்தில் இரவு பகலைவிட அதிகமாயும், வேனிற்காலத்தில் பகல் இரவைவிட அதிகமாயும் இருக்கின்றது. வசந்தகாலத்தில் இரவும் பகலும் சரியாயிருக்கின்றன

(6) இனிகிரகணங்களுண்டாகும் விதத்தை அறிவோம்.

சந்திரன் பூமியையும், பூமி சூரியனையும் சுற்றிவருகின்றன வென்பதை முன்னமே கூறியுள்ளோம். இம்மாதிரி சுற்றிவரும்பொழுது சில சமயங்களில் சந்திரன்பூமிக்கும் சூரியனுக்கும் நடுவேவரும்படி நேரிடுகின்றது. அதனால் சூரியனுடைய ஒளி பூமியின்மேல் விழாதபடி சந்திரனால் தடுக்கப்படுகின்றது. இதற்கே **சூர்யகிரகணம்** என்று சொல்வது. இது அமாவாசை தினத்திலேமட்டும் சம்பவிக்கும். சந்திரனுக்கும் சூரியனுக்கும் நடுவே, பூமிவந்து சூரியனுடைய ஒளியைச் சந்திரன்மேல்விழாதபடி தடுக்கும்போது **சந்திரகிரகணம்** என்பது நேரிடுகின்றது. இது பௌர்ணமி தினத்திலேமாத்திரம் நிகழ்கின்றது.

(இன்னும்வரும்)

# மோக்ஷ சாதனம்

## மானசபூஜை.

(306-ம் பக்கத் தொடர்ச்சி)

மானசபூசை சரியை கிரியைகளைச் சேர்ந்தது. ஆனால் வெளிப்படையாய் எண்ணிறந்த செல்வத்தைச் செலவழித்து எவ்வளவோ சாமான்களைச் சேகரம் செய்து எத்தனையோ ஆட்களைக்கொண்டு பல நாட்கள் சிரமப்பட்டு ஒரு ஆலயத்தை நிர்மாணித்து அதில் ஒரு விக்ரக மூர்த்தத்தை ஸ்தாபித்து அதற்குக் கும்பாபிஷேகம் செய்து உத்ஸவாதிகளை நடத்துவதிலும், ஒரு விடத்தில் உட்கார்ந்து மனதைக் கொண்டு பாவனையினாலேயே அவ்வாறு செய்தல் எத்தனையோமடங்கு அதிகமான பலனை யளிக்கக்கூடியது. அதனால் மனம் ஒரேவிடத்தில் ஒடுங்கி நிற்கும் அனுபவம் உண்டாகும். இரஜோதமோகுணங்கள் எளிதில் ஒழியும். பிறகு மேற்படியாகிய யோகாப்பியாசம் செய்து தன்னை யறிய வழியுண்டாகும். மானசபூஜையில் எவ்வளவு பக்தி அதிகமாகிறதோ அவ்வளவிற் கவ்வளவு ஆண்டவன் அருள் ஆன்மாவில் தாக்கும். எவ்வளவுக் கெவ்வளவு அருள் கிடைக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு ஞானம் எளிதில் கிடைக்கும். இம்மானச பூஜையின் சிறப்பை நிரூபிக்க ஒரு திருட்டாந்தம் கூறுகிறோம் :—

பெரியபுராண கர்த்தாவாகிய சேக்கிழார் மகா பக்திமானென்பது சைவ சமயிகளனைவரும் அறிந்த விஷயமே. அவர் காலத்தில் இருந்த சோழராஜா ஒருவர் மிக்க திரவியஞ் செலவழித்து ஓர் பிரம்மாண்டமான திருக்கோயிலை நிர்மாணித்தார். அதற்காகப் பெருந்தொகை செலவழிந்ததோடு பல வருஷங்களும் பிடித்தன. முடிவில் கும்பாபிஷேகம் செய்து அங்கு ஸ்தாபிக்கப்பட்ட விக்ரகத்திற்கு மூர்த்தீகரம் ஏற்படவேண்டியதற்காக நாள் குறிக்கப்பட்டது. அன்று இரவில் அரசன் கனவில் சிவபெருமான் தோன்றி " இராஜனே! நீ குறித்த தினம் நாம் உன்னால் நிர்மாணிக்கப்பட்ட சந்நிதியில் விளங்கியிருக்க முடியாது. ஏனெனில், நமது பக்தனாகிய சேந்தன் ஒரு கோயில் நிர்மாணித்திருக்கிறான். நீ குறித்த அதே தினம் அவனும் அக்கோயிலில் நம்மை ஸ்தாபிக்க நாள் குறித்திருப்பதால் நாம் அன்று அங்குதான் செல்வோம். ஆதலால் நீ வேறு நாள் குறித்துக்கொள் " என்று கட்டளையிட்டு மறைந்தருளினார்.

அரசன் விழித்தெழுந்து கடவுளைப் பரிசுத்த உள்ளத்தோடு தியானம் செய்து, "அந்தோ ! அந்தச் சேந்தன் எத்தகைய பக்திமானோ. அவன் எத்தகைய அழகிய கோயிலை நிர்மாணம் செய்திருக்கிறானோ. அத்தகைய பக்திமானாகிய புண்ணியவானையும் அக்கோயிலையும் நாம் தரிசித்து வரவேண்டும் " என்ற பேராவல் கொண்டவராய், உடனே தமது மந்திரியை அழைத்துக்கொண்டு சேந்தனுருடைய பிறவி ஸ்தலத்திற்குச் சென்று முன்னாடி திருக்கோயிலைத் தரிசித்தால் சேந்தனையும் காணலாகுமென்றெண்ணி, சேந்தனார் கட்டும் கோயில் எங்குளதென்று விசாரித்தார். ஹிந்துக்களுடைய கோயில் ஒரு சிறு விடமல்லவே. புதிதாய்க் கட்டப்பட்ட கோயில் என்றால் அங்குள்ள யாவர்க்குமே தெரியுமல்லவோ. அப்படியிருக்க அரசன் விசாரித்ததற்கு யாவரும் " இங்கு புதிதாய் ஒருவராலும் கோயில் கட்டப்படவில்லை " என்று கூறினார்கள். அரசன் திகைத்து " இதென்ன, மந்திரி ! பரமசிவம் கனவில் கூறியது பொய்யாகுமோ. அப்படியிருக்க இங்கு எங்கும் புதிதான கோயில் எதுவும் நமது கண்களுக்குப் புலப்படவில்லை. வேறெங்காவது இருக்கிறதோ வென்றால் சேந்தனால் எங்கும் கோயில் கட்டப்படவில்லையென்று கூறுகிறார்களே

பல ஜனங்கள் ஒன்று சேர்ந்து பொய் கூறுவார்களோ. இது எனக்கு மிக்க வியப்பையும் மனக்கலவரத்தையும் உண்டாக்கி யிருக்கிறதே. இதில் எது மெய் எது பொய் ஆய்ந்தறிந்து கூறுவாயாக " என்றார்.

அமைச்சன் சற்று சிந்தித்து "நீதி தவறாத எம்மிறைவரே! ஆண்டவன் பணிவிடையில் சற்றும் தவறாது நடந்துவரும் தமது சொப்பனத்தில் பரமன் கூறியது ஒருபோதும் பொய்யாகுமென்று கருதற்க. அதோடு பல ஜனங்களும் ஒருவரைப் போன்று யாவரும ஒரே விதமாய்க் கூறும் வாக்கியமும் பொய் யாகாது. பின்னை எது உண்மையெனின் இரண்டும் உண்மையே. இதில் ஏதோ நாம் இன்னும் உணராத மர்மம் ஒன்று இருத்தல் வேண்டும். அது சேந்தனரால் தான் வெளியாகவேண்டும். ஆதலால் நாம் அவரைக் காண்பதே தகுதி " என்றான்.

அரையன் " நீ மொழிந்ததே தகுதி. பரமனது பக்தராகிய சேந்தனரை நாமே சென்று சேவித்தல் வேண்டும் " என்றார். அவ்வாறே இருவரும் சேந்தனருடைய இல்லத்திற்கேகி யவரைக் கண்டதே, சேந்தனர் வந்தவர்கள் இன்னாரென்றறிந்து மிக்க பயபக்தியோடு அரசனுக்கும் அமைச்சனுக்கும் ஆசனமளித்து வந்தனை வழிபாடு செய்து,

" மகாராஜனே ! அடியேனால் ஆகவேண்டிய காரியமேதேனுமிருப்பின் அடிமைக்கொரு கட்டளை விடுத்தால் தங்கள் சமுகத்திற்கு ஓடி வரமாட்டேனோ. தாங்கள் இவ்வேழையின் குடிசைக்கு எழுந்தருள சிரமம் எடுத்துக்கொள்ளவேண்டுமோ " என்று வணக்கத்தோடு அரசன் எதிரில் நின்றார்.

அரசன், " சேந்தனரே ! ஆசனத்திலமர்ந்தருளும் நான் அரசனே யெனினும் உம்மளவு பாக்கியவானல்ல. நீரே புண்ணியச் செல்வம் மிகுதியுமுடையவர். பரமசிவத்தின் அன்பென்னும் பெரும்பாக்கியம் நும்மிடமே நிறைந்திருக்கின்றது. அப்பெருமானுக்கு நீர் கட்டியருளிய திருக்கோயிலைத் தரிசிக்க வெண்ணியே நாம் இவண் வர நேர்ந்தது. ஆகையால் எம்மை அழைத்துப்போய் நீர் நிர்மாணித்த கோயிலைக் காட்டியருளும் " என்றார்.

இம்மொழிகளைக் கேட்ட சேந்தனர் திடுக்கிட்டு மனம் பதைத்து மயிர்க் கூச்செடுத்து தேகம் வியர்த்து நடுக்கமுற்று நாக்குழற "இறைவனே! அடியேன் ஒரு கோயில் கட்டத்தக்க செல்வமுடையேனல்லவே. நான் கோயில் கட்டவுமில்லையே " என்றார்.

அதன்மேல் அரசர் தாம்கண்ட கனவைக்கூறி உண்மையைக்கூறும் என்றார். சேந்தனர் கண்களில் நீர்துளிக்கச் சிரமேற் கைக் கூப்பி,

" ஏ கருணாநிதியே ! தங்கள் கிருபை யிவ்வாறிருந்ததோ. சிறியார் சிற்றிலிழைப்பதுபோல் (சிறுவர்கள் மணலால் வீடுமுதலிய கட்டிவிளையாடல்) அடியேன் மானசபூஜையில் நிர்மாணித்தகோயிலும் எங்கும் நிறைந்த பேரருளாகிய தமக்கு எழுந்தருளத் தகுதியாகும் ஸ்தலமாயிற்றோ " என்று ஈசனைப்புகழ்ந்து தாம் மனதினால் பலநாட்களாய் ஒருகோயிலைக் கட்டியதையும், அதில் கடவுளை யெழுந்தருளப்பண்ண ஒருநாள் நியமித்துக்கொண்டிருப்பதையும் கூறினார்.

இவ்வற்புதத்தைக் கேட்ட அரசன், ஆகா, நாம் பெருந்தொகையைச் செலவிட்டுச் செய்ததிருப்பணியைவிட இவர்மனதாற்செய்ததே மிக்க பலனளிக்கத் தக்கதென்று அவரையே தன் ஆசானாகக்கொண்டார்.

இதனால் நாம் வெளிப்படையாகச்செய்யும் சரியை யாதிகளைவிட மனதை ஒருநாட்டத்தில் நிறுத்தி அதைக்கொண்டுசெய்யும் பூசையே கடவுளுக்கு மிக்க உகந்ததாகுமென்று நன்கு விளங்குகிறது. அதோடு இதனால் மனதை விடைய வாசனைகளிற் செல்லவொட்டாது ஒடுங்கி நிற்கச்செய்யும் அனுபவமும் சித்திக்கும், மானசபூஜையால் கடவுளின் அருள் ஆன்மாவில் தாக்குவதற்கு அவசியமாய் வேண்டிய பக்தியும் முதிர்ச்சியடையும்.

இச்சந்தர்ப்பத்தில் எங்கும் நிறைந்த கடவுள் கனவில் வருவதும், அன்று இங்குவருகிலேன் அங்கு செல்வேன் என்று கூறுவதும் எவ்வாறு பொருந்தும் என்று குதர்க்கம் செய்யலாகாது. யார் யார் எவ்வண்ணம் பாவிக்கிறார்களோ அவ்வண்ணமே காட்சியளிப்பதுதான் அவருடைய சர்வவல்லமையென்னும் பேரருளாகும்.

---

## " உருவுகண்டெள்ளாமைவேண்டும் "

கடலாடையுடுத்த இவ்வவனியின்கண் அடைதற்கரிய மானிடஜன்மத்தை யடைந்துள்ள நாம், இதுபாவம், இதுபுண்ணியம், இதுநன்று, இதுதீது, இது மெய், இதுபொய்யென்று பகுத்துணரத்தக்க ஆறும் அறிவொன்றை எல்லாம் வல்ல சர்வேசுரன் நமக்கு, விசேஷமாக அளித்துளனென்பது யாவரு மொப்பத் தக்க ஓர்விஷயமே. இவ்பகுத்தறிவின் மகிமையால் நாம் நமது உற்றார் உறவினரை எவ்விதம்போற்றிப் புனைகின்றோமோ, அவ்விதமே ஏனைய மனிதர்களையும், யாதொரு பேதமுமின்றி சமரசமாய்ப் பாராட்டவேண்டியது நம்மானிடக் கடமைகளிலொன்றாகுமன்றோ ?

அவ்விதஞ்செய்யாது, நம்மவரில் சிற்சிலர், சிலமனிதருடைய குள்ளவடிவினையும் கோரதோற்றத்தையும், விகாரரூபத்தையுங் கண்ணுற்று, வாய் திறந்து, பல்லிளித்து நகையாடி, அவர்கள்புறமே எளனஞ் செய்வதை நாம், நம்வாழ்நாட்களில் கண்டுங் கேட்டும் வருகிறோமல்லவா ?

அந்தோ ! பரிதாபம் ! என்னே இத்தகைய மனிதர்மதி இருந்தவாறு ! கடவுள் எல்லோரையும் ஒரேயுயரமாகவும ஒரேபருமனாகவும், ஒரேநிறமாகவும், ஒரேயழகாகவும் படையாரென்பதை, பாவம், இத்தகைய மனிதர்கள் அறிந்திலர்போலும் ! " யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா யென்றைக்குமுள்ள " அந்த பரந்தாமனுக்கு அறிவுபோதாதென்று இவர்கள் நினைத்தனரோ?

கடவுள் எல்லோரையும் ஒரேமாதிரியாகப் படையார். பலமாதிரியாகவே படைக்கின்றனர். ஆதலினாலேயே ஒரேமாதிரியான இருவரைக் காண்டலரிதினுமரிது. நிற்க,

ஒருமனிதன் வெளித்தோற்றத்திற்கு மிகவுஞ் சிறியவனாகவே காணப்பட்ட போதிலும் அவனுடைய குணாதிசயங்களையுந் தீவிரசக்தியையும் இனிதாராய்ந்து ஓய்ந்துபார்க்கின் பெரும் வியப்பைத்தரத்தக்கனவாகவே இருக்கும். மேலும், கேட்டவரும் மெய்சிலிர்க்கத்தக்க அரிய பெரிய காரியங்களை முடித்து விடுவான். ஆனதுபற்றியே, இதனை வற்புறுத்துமாறு உண்மைஞானந்தெளிந்த மேதாவிகள் பலர் பற்பல கவிகள் பாடியுளர். நந்தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனாரும் தந்திருக்குறளில்,

" உருவுகண்டெள்ளாமைவேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணியன்னா ருடைத்து " என்றும்,

உருண்டுசெல்லும் பிரம்மாண்டமான ஒருதேரில் அச்சாணி யிருப்பது

போல, உலகில் சிறிய உருவமுடைய ஒருவரிடத்தில் தொழில்வல்லமை யிருக்க லாகும். ஆகையால் சிறிய உருவத்தைக்கண்டு ஒருவரை இகழலாகாது.

நந்தமிழ்மூதாட்டியாகிய ஔவைப்பிராட்டியாரும் தம்மூதுரையில்,

" அடக்கமுடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடத்தலையில்
ஓடுமீனோட உறுமீன் வருமளவும்
வாடியிருக்குமாங் கொக்கு" என்றும் கூறினர்.

சிறிய உருவமுடைய அகத்தியர் பெருங்கடலை ஆசமனமாய்ப் பருகிவிட் டார்.

நாகரீகமடைந்த இந்நாசகாலத்திலோ, மனிதர்கள் வெள்ளைச் சீலைக்கே தடுக்கிடுகின்றனர்; " அழுக்குச் சீலைக்குள்ளிருக்கும் மாணிக்கம் " என்ற பழ மொழியை மறந்தேவிடுகின்றனர்! ஐரோப்பியரைப்போல் காற்சட்டை, பூட்ஸ், காலர், டை, போ, முதலிய உடைகளைத்தரித்தும், நாலுமுழத்துண்டை யும் ஒன்றரைமுழத்து வாலையும் வீணிலே மறந்தும், இதுதான் நாகரீகம், இது தான் நாகரீகம் என்று நினைத்துக் கர்வங்கொண்டு திரியுஞ் சில இராப்பட்டினி டம்பாச்சாரியர்களுக்கு மாத்திரமே தற்காலத்திய நாகரீகத்துரைசிங்கங்கள் மரி யாதை செய்கின்றனர். தம்ஊழ்வினைப்பயனால், வறுமையுற்று மேனியுலர்ந்து, நடைமெலிந்து, கந்தைகட்டித்திரியும், கல்வியே உருவெடுத்தாற்போன்ற வித்வ சிரோன்மணிகளாயிருந்தபோதிலும், அவர்களை ஏளனஞ் செய்கின்றனர் தற் காலத்திய சில அறிவீனர்! அந்தோ! இவர்கள் முழுமூடத்தனத்தை என் னென்றுரைப்பது, எவ்விடம்போய்த் தொலைப்பது!! ஐயோ தெய்வமே! திருவள்ளுவநாயனார், ஔவை, இவர்களைப்போன்ற மேதாவிகளை இப்பொழு தும் அனுப்பி, இம்மதிஈனர் செருக்கைச் செறுக்கலாகாதோ ?

ஆகையால் சகோதரசகோதரிகளே! நம்மவர்களே! நாம் இவ்விஷத்தில் கண்ணுங்கருத்துமாயிருந்து, ஒருவருடைய உருவத்தினாலேயே அவர் வல்ல மையை நிச்சயித்துவிடாமல் 'நீடூழிவாழ ஸ்ரீமத் பரந்தாமன் கருணையருள்வா ராக!

சுபம்! சுபம்!! சுபம்!!

---

## உபநிடதசாரம்

### யஜுர்வேதத்தில் ஸ்கந்தோபநிஷத்.

ஓம். ஓ மகாதேவா! தங்களுடைய காருண்ய லேசத்தினாலே (கருணையி னுடைய சுவற்பாம்சத்தினாலே) நான் அழிவற்றவனா யிருக்கிறேன். நான் விக் ஞானகனனா யிருக்கிறேன். (அகண்ட ஞானரூபியா யிருக்கிறேன்.) மங்களகர னாயிருக்கிறேன். இதைப் பார்க்கிலும் சிரேஷ்டமெதிருக்கிறது. அந்தக்கர ணத்தினுடைய கலக்கத்தினால் நிஜமானது நிஜமாய்விளங்கவில்லை. அந்தக்கரண நாசத்தினாலே ஹரியானவர் ஞானசுவரூபியா யிருக்கிறார். நானும் ஞானசுவ ரூபியா யிருக்கிறதினாலே பிறப்பற்றவனா யிருக்கிறேன். இதைவிட சிரேஷ்ட மெதிருக்கிறது. (ஆத்மாவுக்கு) அந்நியமான ஜடவஸ்துக்களெல்லாம் சுவப்னத் தைப்போல் நசித்துப்போகிறது. சித் ஜடங்களை (சேதனா சேதன பிரபஞ்சங் களை) எவன் பார்க்கிறவனோ அந்த அச்சுதன் ஞானத்தை சுவரூபமாயுடையவன். அவனே மகாதேவன். அவனே மகாஹரி. அவனே ஜோதிக்கெல்லாம் ஜோதி யாயிருக்கிறவன். அவனே பரமேஸ்வரன். அவனே பிரம்மம். அந்த பிரம்மந் தான் நான். சமுசயமுமில்லை. ஜீவனே சிவன். சிவனே ஜீவன். அந்த ஜீவன்

சிவனே தான். உமியினுற் கட்டுப்பட்டிருக்கிறபோது நெல்லாயிருக்கிறது. உமி யற்றதானுனபோது அரிசியாகிறது. அப்படித்தான் ஜீவனும் கட்டுப்பட்டிருக்கிருன். கருமம் நாசமானுல் எப்போதும் (மங்கள சுவரூபியாகிய) சிவனுயிருக்கிருன்.

(கரும) பாசத்தினுல் கட்டுப்பட்டிருக்கிற வரையில் ஜீவனுயிருக்கிருன் பாசத்திலிருந்து விடுபட்டால் அப்போது சிவனுயிருக்கிருன். விஷ்ணுரூபமாயிருக்கிற சிவன் பொருட்டும் சிவரூபமாயிருக்கிற விஷ்ணுவின் பொருட்டும் நமஸ்காரம் சிவனுடைய ஹிருதயமே விஷ்ணு. விஷ்ணுவினுடைய ஹிருதயமே சிவன். எப்படி இவ்விருவரிலும் பேதம் நான் காணவில்லையோ அப்படி எனக்குச் சந்தோஷமும், ஆயுசு (பிறப்பிறப்பு அற்ற இருப்பு) முண்டாகக் கடவது. சிவ கேசவர்களுக்குள்ளே பேதம் கிடையாது.

தேகமானது தேவாலயமென்று சொல்லப்படுகிறது. ஜீவனுனவன் எப்போதும் மங்களசுவரூபியான தேவனுகவே யிருக்கிருன். அஞ்ஞானமாகிற நிர்மாலியத்தைத் தள்ளி அவன் (அந்தச்சிவன்) "நானே" என்கிற பாவனையுடன் பூஜிக்கவேண்டியது. அபேதமாய்ப் பார்க்கிறதே ஞானம். மனது விஷயத்தில் பற்ருமை தான் தியானம். மனதிலுள்ள தோஷத்தை விடுவதுதான் ஸ்நானம். இந்திரியங்களை யடக்குவதுதான் சௌசம். பிரம்மாமிருதத்தைக் குடிக்க வேண்டியது. (இதுதான் பானம்.) தேக சம்ரக்ஷணைக்காக பிக்ஷை எடுத்துண்ண வேண்டியது. ஒருவனுகவே ஏகாந்தமான விடத்தில் இரண்டாவதற்றவனுக (பிரம்மத்தைத் தவிர வேறு வஸ்துவைப் பாராதவனுக) வாசம் செய்ய வேண்டியது. இந்தப்படி நடக்கிற புத்திமானெவனே அவன் முக்தி யடைகிருன்.

ஸ்ரீமத் பரஞ்ஜோதியின் பொருட்டு நமஸ்காரம். சந்தோஷமும், சிராயுசும் (எப்போதும் பிறப்பற்ற தன்மையும்) உண்டாகக் கடவது. ஓ நரசிம்மா? ஓ தேவேசா! உம்முடைய பிரஸாதத்தினுலே விரிஞ்சி நாராயண சங்கரசுவரூபமாயும், அசிந்தியமாயும், அவ்வியக்தமாயும், அநந்தமாயும், அவ்விய்யமாயும், (அழியாதது) தேவாத்துமகமாயும் இருக்கிற பிரம்மத்தின் நிஜஸ்வரூபத்தை யறிகிருர்கள்.

ஆகாயத்தில் வியாபித்திருக்கிற கண்ணைப்போல (ஆகாசத்தில் காணப்படுகிற வஸ்துக்களைக் கண்ணனது தடையின்றிப் பார்க்கிறதுபோல) அந்த விஷ்ணுவினுடைய பரமபதத்தை ஞானிகள் எப்போதும் பார்க்கிருர்கள். எப்போதும் விழித்துக்கொண்டிருக்கிற ஞானக் கண்களையுடைய பிராம்மணர்கள், விஷ்ணுவினுடைய பரமபதமெதுவோ அதை அநேகவிதமாய் ஸ்தோத்திரம் செய்துகொண்டு பிரகாசப்படுத்துகிருர்கள். இந்தப்படிக்கு வேதத்தினுடைய மோக்ஷ விஷயமான ஆக்ஞை என்றுபநிஷத்.

ஸ்கந்தோபநிஷத் முற்றிற்று.

---

## சிறுவர்களும் மாணவர்களும் கவனிக்க வேண்டிய சில விதிகள்.

1. ஒன்றை யொருதரம் வாசித்ததாலேயே அதிலுள்ள பொருள் முழுதும் தெரிந்துகொண்டோமென்று என்ணிவிடலாகாது. பன்முறைபார்த்து ஆழ்ந்து யோசிக்க யோசிக்க மறைபொருளாயுள்ள அர்த்தங்களனைத்தும் புலப்படும்.

2. பரிட்சைகாலங்களில் சிலமாணவர்கள் தங்களுக்கு நன்ருய்த் தெரிந்து ஞாபகத்திலிருக்கும் கேள்விகளுக்கு "இது தெரிந்ததுதானே. பின்னுல்

எழுதிவிடலாம் என்று" விடை யெழுதாது விட்டுவிட்டு, விடையளிக்கக் கஷ்டமாயிருப்பனவும் அச்சமயம் விடை கவனத்திற்குவராதவையுமான கேள்விகளுக்கு முன்னே விடையெழுத முயன்று கஷ்டப்பட்டுக்கொண்டும் சிந்தித்துக்கொண்டும் காலத்தை வியர்த்தமாக்குகிறார்கள். இது பெருந்தவறு. ஒரு சமயம் பெருமோசமாய் முடியும். ஏனெனில் இவர்கள் யோசிப்பதிலேயே விடையளிப்பதற்கென்று ஏற்பட்ட காலம் போய்விட்டால் பேசாமல் வெறுங் கடிதத்தைத் தான் கொடுத்துவிட்டு துக்கத்தோடு திரும்பவேண்டும். சிலசமயங்களில் தெரிந்தவிடைகளை யெழுதக் காலம்போதாமல் மனவருத்தத்தோடு விடைகளெழுதிய கடிதத்தைக் கொடுத்துவிட நேரிடும்.

ஆகையால் எப்போதும் முன்னே தெரிந்த விடைகளை யாலசியமின்றி தட்சணம் எழுதிவிடவேண்டும். இன்றேல் தெரியாதகேள்விக்காக கஷ்டப்படுவதால் புத்தி சபலமடைந்து முன் கவனமிருந்த விடையும் மறந்துபோய் விடும். இது அனுபவமானது.

3. தினந்தோறும் புதுபாடத்தை வாசிக்கும் முன்பு அதற்குமுன்னுள்ள இரண்டுநாட்களின் பழம்பாடங்களையாவது ஒருதரம் வாசிக்கவேண்டும்.

4. ஆங்கிலபாடம் எதைவாசித்தாலும் அதிலுள்ள ஒவ்வொரு பதங்கட்கும் தமிழ் அர்த்தம் முன்னே தெரிந்துகொள்ளவேண்டும். தேசசரித்திரம் (History) பூகோளசாஸ்திரம் (Geography) முதலிய பாடங்களைப்படிக்கும்போது பெரும்பாலான மாணவர் நுனிப்புல்லை மேய்வதுபோல் விஷயத்தைமட்டும் தெரிந்துகொண்டால் போதுமென்று கருதுகிறார்கள். அப்படி வாசிப்பதால் அன்னிய பாஷாஞானத்தில் ஒருபோது நல்லவிர்ப்பத்தி யுண்டாகாது. அவற்றிலுள்ள வார்த்தைகளுக்கெல்லாம் தமிழ் அர்த்தம் தெரிந்துகொள்ளவேண்டும்.

5. வாசிக்கும் புத்தகங்களை யெப்போதும் அழுக்கின்றி சுத்தமாக வைத்துக்கொண் டிருக்கவேண்டும். புத்தகங்களின் பக்கங்களில் ஒன்றும் எழுதலாகாது. அவைகளை யெப்போதும் பக்தியோடு கையாடவேண்டும்.

6. உபாத்தியாயரிடம் எப்போதும் பக்தியும் விசுவாசமும் கொண்டொழுகவேண்டும். அவர்மனம் நோகும்படிச்செய்தால் நாம் விர்த்தியடைய மாட்டோம் என்பதை மறக்கலாகாது.

---

## சமயோசிதபுத்தி எப்போதும் நன்மைதரும்.

ஒரு மஹம்மதிய வயோதிகர் தன் நரைத்த தாடிக்குக் கறுப்புச் சாயம் போட்டுக்கொண்டிருப்பது வழக்கம். தலைமயிரை தலைப்பாகை சதா மறைத்திருப்பதால் அதற்கு அவர் சாயம் பூசவில்லை. ஒருநாள் அவர் தன் இளமைத் தோழர்களோடு சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் தற்செயலாய் ஒருவருடைய கைபட்டு தலைப்பாகை கீழேவிழுந்துவிட்டது. உடனே பண்ணைப்பூவைப்போல் நரைத்தத் தலைமயிரைக்கண்டதே யாவரும் தாடி கறுப்பாயிருக்கத் தலைமயிர் பால்போல் இருக்கிறதே யென்றுகூறி நகைத்தார்கள். உடனே அவர், அவர்களைநோக்கி,

"இவ்வளவுதானோ உங்கள் புத்தி, என்தாடியினும் தலைமயிர் இருபதுவயது முதிர்ந்தது. அதனாலது அறுபதுவயதில் நரைத்துவிட்டது. தாடிக்கு நாற்பதே வயதானதால் நல்ல யௌவனத்தில் கன்னங்கரேலென் றிருக்கிறது" என்றார்.

---

## ஸ்திரீகள் பக்கம்.

" பதிவ்ரதா பதிப்பிராணு ஸாநாரீ தர்மபாகினீ
சுச்ருஷாம் பரிசர்யாஞ்ச கரோத்யவிமனுஸதா "

தன்னுடைய பர்த்தாவினிடத்தே விரதம் நடத்துபவளாயும், அவனிடத்தே பிராணனுள்ளவளாயும், அவனுக்குச் சிஸ்ருஷையும் பணிவிடையையும் மனத்திற் பிரீதியுடன் செய்கின்றவளாயுமுள்ளவளே புண்யவதி. அவளே தன் பர்த்தா (கணவன்) வுடன் தர்மபாகமுள்ளவளாவள்.

இதை இன்னும் விவரித்துக் கூறுவோம். பர்த்தாவினிடத்தே விரதம் நடத்துவது: கணவனைத் தவிர வேறு ஒருவர் மீதும் ஆசையையாதிருத்தல்; அவனிடத்தே பிராணனுள்ளவள்; தனது பிராணனை அவனுக்கு ஒப்புவித்து, அவன் வேறு தான் வேறு என்று பாவியாதிருத்தல்; உடல்வேறு உயிரொன்ருயிருத்தல்; இதனுலேயே கணவனுக்கு பிராணநாயகன் என்றொரு பெயருமுண்டு. 'சிஸ்ருஷை' யாவது ஏவுதலில்லாமல் கணவனுடைய மனதையறிந்து அவனுடைய சவுக்கியத்தையும், சந்தோஷத்தையும் உத்தேசித்து தானுய்ச் செய்யும் உபசாரங்களாம். "பணிவிடை" ஏவின காரியத்தைச் செய்தல். 'பிரீதியுடன்' ஏவாமற் செய்யப்பட்ட காரியமாயினும், ஏவுதலின் மீது செய்யப்பட்ட காரியமாயினும், அதனை மனமுவந்து கணவனைத் திருப்திப்படுத்த வேண்டுமென்னும் மனப்பூர்த்தியான விருப்பத்துடன் செய்யவேண்டும். இல்லையெனின், வேலைக்காரன் சம்பளத்தினிமித்தம் செய்யும் காரியத்திற்கும் மனைவி செய்யுங் காரியத்திற்கும் வித்தியாசமில்லாமற் போம். கணவனுடைய சுகமே தனது சுகம், அவனைச் சந்தோஷிப்பதே தனது சந்தோஷமெனக் கொண்டு செய்பவளே மனைவியாவள். கணவனுடைய அதிகாரத்திற்கு பயப்பட்டுச் செய்பவள் மனைவி ஆகாள். ஏனெனில் மாதாமாதம் சம்பளம் வாங்கும் வேலைக்காரன் உணவு, ஆடை ஆபரணமுதலிய பற்பல ரூப்மாய்ச் சம்பளம் வாங்கியும் சம்பளம் இல்லாத சேவகம் என்று நினைக்கும் பெண்டீர்களை விட சிரத்தையுடனும் பயத்துடனும் செய்வானென்பது நிச்சயமன்ரே ? " புண்யவதி " இவ்வாறு கணவன் என்னப்படும் மற்ரேர் ஆன்மாவைத் திருப்திப்படுத்திச் சந்தோஷிப்பிக்கும் பாக்கியம் எல்லோருக்குமே கிடைப்பதரிது. உடல் வேருகினும் உயிர் ஒன்ருகி, இருவரும் ஒருமித்து இவ்வுலகத்துச் சுகங்களை அனுபவித்துக் கடமைகளை விதிப்படி செய்து முடித்து, ஒருவருக்கொருவர் நற்றுணையாய் நின்று, வாழ்நாளை நல்வழியிற் செலுத்தி ஆநந்தித்துப் பரலோகம் சேர்ந்து பகவானையடையும் பாக்கியம் எல்லோருக்குமே கிடைக்குமா ? அரிது, அரிது, மூக்காலுமரிது.

" பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையுண்டானுல்
எத்தாலுங் கூடியிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமாருகவிருப் பாளேயாமாயிற்
கூருமற் சந்நியாசங்கொள் " என்று ஔவைப் பிராட்டியாரும்
மொழிந்தனர்.

**தர்மபாகமு**ள்ளவள்—கணவன் செய்யும் புண்ய கர்மங்களது பயனிற் பாதி மனைவியைச் சேருமென்பது சாஸ்திர சித்தாந்தமாம். அதனுலேயே அவளுக்கு தர்மபாகினி என்று பெயர் வந்தது. மேற்சொல்லிய விதமாக அவள் நடப்பாளாயின் அவள் தர்மபாகினியேயாவள். அவ்வாறு நடவாதவள் மனைவியுமாகாள், தர்மபாகினியுமாகாள். இவ்வாறு ஆரியர்கள் சொல்லி யிருப்பதினுல் இத்தன்மையான மனைவி வாய்த்தவன் உலகத்திற் பூஜ்யனெனப்படுவான். புரு

ஷன் பூஜ்யதை யடைவானாயின் அவனுடைய மனைவிக்கு குறை என்னை ? அவளுடைய ஆசைகளும் விருப்பங்களும் அவன் மூலமாய் நிறைவேறு மென்பது உண்மையாம்.

அஃதன்றி பந்து மித்ராதியர்க்கு இவர்களிடத்தில் விசேஷ கௌரவமுமுண்டாகும். இந்த நன்கு மதிப்புண்டாவதற்கு காரணம் ஸ்திரீயானவள் தன்னுடைய ஸ்வதர்மத்தை நெறிவழுவாது முரண்பாடின்றி ஆசரித்தலேயாம்.

---

## கற்கோட்டை—நாவல்

(275-ம் பக்கத் தொடர்ச்சி)

கமலாம்பாள் மிக்க ஆச்சரியத்தோடு "அதே யிரவு இரண்டு மூன்று நாழிகைகளில் போய்விட்டானா ? உண்மையாகவே ?" என்று கேட்டாள்.

தங்கம்மாள் ஆம் குழந்தாய் அன்று இரவே பொழுதுவிடிவதற்குள் அவன் போய்விட்டான் என்று கலவரமில்லாது கூறினாள்.

கடைசியில் அன்றிரவு நடந்த சங்கதி தன் நன்மையைக் கருதியே இரகசியமாய் வைக்கப்பட்டதென்றே கமலாம்பாள் நம்பிக்கொள்ளவேண்டியதா யிருந்தது. பிறகு அங்குவந்த அரியநாயகியும் கமலாம்பாளுக்கு அவ்வித அபிப்பிராயமே தோற்றுமாறு இனிய வசனங்களைக்கூறி "என் கண்மணியே. நான் உன்மேல் எவ்வளவு அன்புவைத்திருக்கிறே னென்பதை நீ நன்றாயறிவாய். சிறுவயதில் நடந்த ஏதோ சங்கதிகளையெல்லாம் இப்போது நீ புத்தியறிந்த பிறகு ஒரு பிரமாதமாய் எண்ணிக்கொண்டு சிந்திக்கலாகாது. உன்தந்தை நகரத்திற்குப் போயிருக்கிறார். அவர் வரும்போது நீ நல்லபுத்தி சுவாதீனத்தோடு சந்தோஷமாக விருந்தால்தான் அவர்மனதிற்கு நிம்மதியாயிருக்கும்" என்று தேறுதல் கூறினாள்.

கமலாம்பாள் அறையில் தனியேயிருக்க நேர்ந்தபோது அவள் சிந்தனையிலேயே யிருந்தாள். உண்மை யின்னதுதான் என்பதை உறுதியா யறிந்துகொள்ளவேண்டுமென்பது அவளுடைய நோக்கம். எவ்விதமாய்ச் சிந்தித்தாலும் உண்மை புலப்படவில்லை. சட்டென்றெழுந்து இரவு தான் அணிந்திருந்த உடைவைத்திருந்த விடத்தில்பார்த்தாள். அதைக் காணவில்லை. வேறொரு உடை அதற்குப்பதிலாய் அங்கே வைக்கப்பட்டிருந்தது. அதோடு சிறுபையையும் காணோம். அவள்மனதிற்கு மிக்க வியாகூல முண்டாய்விட்டது. அவர்கள் கூறிய யாவும் உண்மையல்லவென்று அவள் மனதிற்பட்டது. ஆனால் உண்மை யின்னதென்று விளங்கவில்லை. ஆயினும் அவள் தந்தையிடத்தில் எப்போதும் பக்தியும் விசுவாசமும் உடையவள், தந்தைசொல் தவராதவள் ஆகையால் தன் தந்தை எதைச்செய்தாலும் தன் நன்மையையும் க்ஷேமத்தையும் கருதியே செய்வாராதலால், தான் அவர்மனதிற்கு வியாகூலமாவது அதிருப்தியாவது நேரிடும் வண்ணம் நடந்துகொள்ளலாகாது என்று தனக்குத்தானே தீர்மானித்துக்கொண்டாள். ஆகையால் அவள் வெளிக்கு ஒன்றும்கூறாமல் தன் துயரமனைத்தும் மனதிலேயே யடக்கிக்கொண்டிருந்தாள்.

அவள்மனதில் இன்னொரு ஆவல் இருந்தது. அதாவது அந்த நெருங்கிய வழியில் கள்ள அறை யில்லையென்று இவர்கள்கூறியது உண்மையாவென்பதை யறியவேண்டுமென்பதே. இரண்டுநாள் கழித்து ஒருநாள் அங்குசென்று இரு பக்கத்திலுமுள்ள சுவர்களைத் தட்டித் தட்டிப்பார்த்தாள். ஒரு விடமும் மகப்படவில்லை. அதிலும் அவளுக்குத் திருப்தியுண்டாகவில்லை. ஏனெனில் தன்

சோதனையால் அங்கு கள்ளஅறை யிருக்கிறதென்றும், இல்லையென்றும்தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆகையால் அதுமுதல் அவள்மனதிற்கு நிம்மதியாவது சந்தோஷமாவது கிடையாது.

இச்சம்பவம் நடந்து சிலநாட்கள் கழிந்தபின் ஒருநாள் இரத்தினபுரி நகரத்திலும் அதைச்சுற்றி 4—மைல் தூரம்வரையிலும் ஒருவிஷயம் விளம்பரப்படுத்தப்பட்டது. அதாவது,

"நகர ஓரத்திலுள்ள ஐயம்பேட்டையென்ற ஸ்தலத்தில் ஒரு பழைய மதக்கட்சியாரால் ஓர் சதியாலோசனை நடந்தது. அங்கு கூடியவர்கள் இரகசியமாய்ப் பழையமதக்கொள்கைகளை யனுசரிப்பதோடு இராஜாத்தியைக் கொன்றுவிடச் சதியாலோசனை செய்துகொண்டிருந்தார்கள். அங்கு கூடியிருந்தவர்களில் தைரியபூஷணம் பிரபு, 1. பட்டாபிராம் பிரபு, 2, சாமிநாதம்பிரபு, 3. குலசேகரம் பிரபு, (கண்ணபிரான் பெரியதந்தை) 4. இவர்களே யகப்பட்டவர்கள். இவர்கள் நால்வரும் பிரத்யேக நியாயசபையால் விசாரிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பெற்றார்கள். அங்கிருந்தவர்களில் மற்றபேர் ஓடிவிட்டார்கள். அவர்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு பிடிக்கப்பட்ட ஒரு ஆளுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் பரிசளிக்கப்படும்" என்று வீதிகள்தோறும் பறையறைந்து விளம்பரம் செய்யப்பட்டது.

இச்சங்கதிகளைக் கமலாம்பாள் கேள்விப்பட்டபோது, அதில் குறிக்கப்பட்ட நாமங்களில் கண்ணபிரானென்ற நாமமாவது, அம்பலவாணன் என்ற நாமமாவது இல்லாதிருந்ததால் ஒருவித மனோநிம்மதியடைந்தாள். மறுநாள் மேற்கண்ட 4 பிரபுக்களும் சிரச்சேதம் செய்யப்பட்டார்கள். ஆனால் ஓடிவிட்டவர்களில் மட்டும் ஒருவர்கூட அகப்படவில்லை. அவ்வாறே மூன்றுவருடங்கள் கழிந்தன. ஓடினவர்கள் எங்கிருக்கிறார்கள் என்னகதியானார்கள் என்பதே யாருக்கும் தெரியாது.

---

## 6-வது அத்தியாயம்

மூன் அத்தியாயத்திற்கண்ட சம்பவங்கள்நடந்து மூன்று வருடங்கள் கழிந்தன. இப்போது நாம் பாஞ்சாலநாட்டின் துறைமுகநகரங்களுள் ஒன்றாகிய பரவையூரில் நடக்கும் விஷயத்தைக் கவனிக்கவேண்டியது நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசியமாகிறது. அந்நகரின் துறைமுகத்தில் எப்போதும் வர்த்தகக்கப்பல்கள் இருந்துகொண்டேயிருக்கும். ஒருநாள்மாலை 5—மணி யிருக்கும். அச்சமயம் ஒருகப்பல் தன் கடைசிசாமான்களையும் பிரயாணிகளையும் ஏற்றிக்கொண்டிருக்கிறது. அக்கப்பலின்பெயர் " இராஜமாளிகை " அது கருப்பு நிறம் பூசப்பட்டிருந்தது. அதில் இருந்த மாலுமிகளனைவரும் நல்ல பலசாலிகளாயும் சுறுசுறுப்புடையவர்களாயுமிருந்தார்கள். அதன்கப்பித்தானே அதன் சொந்தக்காரனுதலால் அவன் வேறொருவருடைய கட்டளைக்காக எதிர்பார்க்க வேண்டியதில்லை. துறைமுக அதிகாரி அப்போதுதான் அக்கப்பலின் பத்திரங்களைப் பார்வையிட்டுக் கையொப்பம் வைத்துக் கப்பலிலிருக்கும் முதல் உத்தியோகஸ்தனிடமளித்தான். அந்த உத்தியோகஸ்தன் சுமார் 25 வயதுடைய சுறுசுறுப்பானவாலிபன்.

சாமான்கள்யாவும் கப்பலில் ஏற்றப்பட்டானதே கப்பித்தானுகிய தேவதத்தன் நங்கூரம் தூக்கும்படி கட்டளையிடும்சமயம் கரையிலிருக்கும் ஜனக்கூட்டத்தில் கொஞ்சம் குழப்பம் உண்டாயிற்று. ஏனென்றால் ஒருமனிதன் மிக்க அவசரத்தோடு கப்பலிலேறுவதற்காக ஜனங்களை விலக்கிக்கொண்டு துரித

மாய் வருகிறான். இரத்தினபுரிக்குக் கப்பல்செல்கிறதென்று சற்று முன்பு தான் அவன் கேள்விப்பட்டான். இராணுவ உடையணிந்திருக்கும் அம்மனி தன் கரையோரம் வந்ததும் கப்பித்தானை விளித்து "ஒரு ஆளுக்கு இடம் இருக்கிறதா?" என்று கேட்டான். கப்பித்தான், "ஒரே யொரு ஆளுக்கு மட்டுமே. கூட ஆட்கள் இருந்தால் முடியாது" என்றான். வந்த மனிதன் நான் ஒருவன்மட்டுமேயன்றி வேறு யாரும் இல்லையென்று கூறிக்கொண்டே கையிலிருந்த ஒரு பிரயாணப் பையோடு கப்பலில் ஏறினான். உடனே நங்கூரம் தூக்கப்பட்டதும் கப்பலும் பாய்விரித்துப் புறப்பட்டது.

கப்பலில் ஏறியவன் சுமார் 23-வயதுள்ள அழகியபுருடன். முதலில் கப்பித்தான் அவனை உன்னிப்பாய் உற்றுநோக்கினான். அதற்குள் கப்பல் பிரயாணப்பட்டுவிட்டதால் வேண்டிய கட்டளைகளை நடப்பிப்பதற்காக கப்பலின் வேறு பாகங்களுக்குச்சென்றான். பிரயாணியும் கப்பலில் ஏறியதே யதன் அமைப்பைக்கண்டதும் அதன் எல்லாப்பாகங்களையும் நன்றாய்ப் பார்க்கத் தொடங்கினான். கப்பித்தானுடைய புத்திரனை வாலிபனையும் கப்பலாட்களுடைய முகங்களையும் வியப்போடு உற்றுநோக்கியபின் "ஆம் ஆம். அப்படித் தான் இருக்கவேண்டும். என்ன ஆச்சரியம்." என்று தனக்குத்தானே கூறிக் கொண்டான்.

ஆயினும் சந்தேகமறத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று கருதிக் கப்பித்தானுடைய புத்திரனும் கப்பலின்முதல் உத்தியோகஸ்தனுமான பலராமனை நோக்கி, "இது ஒருநேர்த்தியான கப்பல். இதன்பெயரென்ன?" என்றான். பலராமன், "இராஜமாளிகை" என்று கூறிவிட்டு பிரயாணியின் முகத்தை நன்றாய் நோக்கியபின், கப்பலின் மற்றோர் பாகத்திற்குச்சென்று தன்தந்தையிடம் என்னமோ குசுகுசுவென்று மொழிந்தான். தந்தை, "நான் முன்னமே யப்படிதான் சந்தேகித்தேன். கொஞ்சம்பொறு. சரியா யுண்மையைத் தெரிந்து கொள்வோம்" என்றான்.

அதன்பிறகு கப்பித்தான் தன் அறைக்குச்சென்று அங்கிருந்த ஒருபெட்டியைத் திறந்து சிலகடிதங்களையெடுத்து அவற்றில் அச்சடித்த விளம்பரம்போன்ற ஒன்றைப்பொருக்கி அதன் பின்புறம் எழுதப்பட்டிருந்த சிலகுறிப்புகளை வாசித்துப் பார்த்தபின் தன்புத்திரனிடம் சற்றுநேரம் இரகசியமாய் ஏதோ ஆலோசனை செய்தான். பிறகு ஒருநாள் முழுதும் அவர்கள் நமது பிரயாணியைக் கவனிக்க வில்லை.

மறுநாள்மாலை ஆறுமணிசுமாருக்கு கப்பல் இரத்னபுரியின் மத்தியில் ஓடும் ஆற்றில் நுழைந்தது. பிரயாணி கப்பலின் மேல்தட்டில் நின்று இருபக்கங்களிலுமுள்ள பூமியைப்பார்த்துக்கொண்டிருந்தான். அச்சமயம் கப்பித்தான் அவனருகிற்சென்று அவன் தோளைத்தொட்டு "உன்னிடம் ஒருவார்த்தை பேசவேண்டும்" என்றான். உடனே இருவரும் கப்பித்தானுடைய அறைக்குச் சென்றார்கள். கப்பித்தான் உடனே கதவைமூடிவிட்டு பிரயாணிக்கு ஒரு ஆசனமளித்துத் தானும் எதிரிலுட்கார்ந்து "நாம் இதற்குமுன்பு சந்தித்திருக்கிறோம்" என்றான்.

பிரயாணிக்கு இது உண்மையே யென்று தெரியும். சாதாரணமாய் அவ்வாறு கேட்டிருந்தால் அவன் உடனே ஆம் என்று கூறிவிட்டிருப்பான். ஆனால் கப்பித்தான் முகக்குறியால் அவன் ஏதோ துர் எண்ணத்தோடு அக்கேள்வியைக் கேட்பதாய்த் தெரிந்தபடியால் "ஒருபோதும் சந்தித்திருக்கமாட்டோம்" என்றான்.

கப்பித்தான், "இல்லை சந்தித்தேயிருக்கிறோம். இடையில் நீ வெளி

நாட்டில் இராணுவ சேவகத்திலிருந்ததாய்த் தெரிகிறது. அடியோடு உடாய்த் துப்பேசக் கற்றுக்கொண்டிருக்கிறாய். ஆனால் அது பயன்படாது " என்றான்.

**பிரயாணி:**—" உன்மனதிலிருக்கும் யோசனைதான் என்ன ? " என்றான்.

**கப்பித்தான்:**—"இதோ கூறுகின்றேன் கேள். ஆனால் இப்போதும் முன் போலவே உன்னை அம்பலவாணன் என்ற பெயராலேயே யழைக்க லாமோ ? வென்பதை முன்னேகூறு " என்றான்.

**பிரயாணி:**—" அதல்ல என்பெயர். எனது நாமதேயம் காப்டென் அமீர்த ஸிங் " என்றான்.

**கப்பித்தான்:**—எப்படியாயினும் கூறிக்கொள். மூன்றுவருடங்களுக்கு முன் உன்னுடைய பெயர் அம்பலவாணன் என்றே யிருந்தது.

**பிரயாணி:**—மறுபடி அப்படியா கூறுகிறாய் ?

**கப்பித்தான்:**—இதோ நிரூபிக்கிறேன். மூன்றுவருடங்களுக்கு முன் இதே கப்பல் இரத்னபுரியின் கரையிலிருந்தபோது ஒருநாள் இரவு உயர்ந்த அந்தஸ்தைச்சேர்ந்த சிலபிரபுக்கள், அவர்களெல்லாம் ஐயம்பேட்டை சதியா லோசனைக் கூட்டத்தைச்சேர்ந்தவர்கள், இராணியின் போர்வீரர்க்குத் தப்பி வெளிநாட்டிற்கு ஓடிவிட்டார்கள். நீமட்டும் என்கப்பலில் ஏற்றப்பட்டாய்.

**பிரயாணி:**—எனக்கு எந்தச் சதியாலோசனை சங்கதியும் தெரியாது. நான் எந்தச் சதியாலோசனைக்கூட்டத்திலும் சேர்ந்ததில்லை. இனி என்றைக்கும் சேரப்போவது மில்லை.

**கப்பித்தான்:**—மெதுவாய்—மெதுவாய்ப் பேசு—எப்படியாயினு மிருக்கட்டும். அன்று துரைத்தன காவற்காரர் மிக்க ஜாக்கிரதையோடு துறைமுகத்தில் காவலிருந்தார்கள். ஸர்தார் செல்வராயர் உன்விஷயத்தில் மிக்க சிரத்தை யெடுத்துக்கொண்டு உன்னைக்கொண்டுவந்து என்கப்பலில் ஏற்றினார் என் பது உண்மை.

பிரயாணி என்ன சாமர்த்தியம் செய்தும் முடியவில்லை. கடைசியில் கப்பித்தான், "இதோ பார் ருசு. இதில் உன் அடையாளங்களெல்லாம் விவர மாய்க் குறிக்கப்பட்டிருக்கிறது பார்......" என்றான்.

**பிரயாணி:**—" இருக்கட்டும். அப்படியே யிருந்தாலும் ஸர்தார் செல்வராயர் உனக்குச் சரியான பணம்கொடுத்து உன்னை நம்பிதானே அந்த ஆளை யுன்கப்பலில் ஏற்றினார் ? அப்படியிருக்க நீ என் இந்த அடையாளங்களைக் குறித்து வைத்துக்கொண்டிருக்கிறாய் ?" என்றான்.

**கப்பித்தான்:**—" உள்ளதைக் கூறுகிறேன். அச்சதியாலோசனையில் சம்பந்தப் பட்டவர்களில் சிலர் அகப்பட்டு மரணதண்டனை யடைந்தார்கள். சிலர் எங்கோ ஓடிவிட்டார்கள். உனக்குத்தகுந்த உதவிகிடைத்ததால் நீமட்டும் பத்திரமாய் என்கப்பலில் ஏற்றப்பட்டாய். அதற்காக ஸர்தார் செல்வ ராயர் எனக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தார். ஏற்பாட்டின்படி நான் உன் னைப் பத்திரமாய்க் கொண்டுபோய் பரவையூரில் கரை யிறக்கிவிட்டேன். நான் பிறகு இரத்னபுரிக்கு வந்தபோது மேற்படி சதியாலோசனைக் கூட் டத்தில் சம்பந்தப்பட்டு அகப்படாமல் ஓடிவிட்டிருப்பவர்களை யாராவது பிடித்துக்கொடுத்தால் பிடிக்கப்பட்ட ஒவ்வொருவருக்காகவும் மூவாயிரம் மூவாயிரம்ரூபாய் பரிசளிக்கப்படுமென்று விளம்பரம் செய்யப்பட்டிருப் பதைக் கண்டேன்......" என்றதே.

**வாலிபன்:**—" அப்புறம் என்ன ?" என்றான்.

**கப்பித்தான்:**—"எங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆயிரம் ரூபாய்க்காக உன்னைப் பரவையூரில் இறக்கிவிட்டதோடு அப்பொருப்பு நீங்கிவிட்டது. மறுபடி நீ யெங்களிடம் சிக்குவதானால் உன்னால் 3000-ரூபாய் கிடைப்பதாயிருப்பதால் எதற்கும் நல்லதென்று உன் அடையாளங்களை இக்கடிதத்தில் குறித்து வைத்துக்கொண்டோம்" என்றான்.

**வாலிபன்:**—சரி, அப்படியானால் அப்பணத்திற்காக என்மரணத்தைக் கோருகிறீர்களோ? ஏனெனில் என்னிடம் அவ்வளவு பணம் இல்லையென்பது வெளிப்படை. நான் அனாதரவாய் நாட்டைவிட்டோடி ஜீவனத்திற்காக அன்னியநாட்டில் இராணுவ சேவகம்செய்தேன். என்னிடம் 500-ரூபாய்க்கு மேல் கிடையாது.

**கப்பித்தான்:**—உன்னைப்பிடித்து கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கில்லை. உனக்கு நல்லகாலம் பிறந்து நீ கொடுக்குமட்டும் காத்திருக்கவும் முடியாது. இரண்டொரு மொழிகளில் சங்கதியைக் கூறிவிடுகிறேன். அதாவது என்மனதில் ஒரு யோசனையிருக்கிறது. நீ யதற்கு உதவி செய்யக்கூடும். செய்தால் உனக்கும் நல்ல பொருள்கிடைக்கும்.

**வாலிபன்:**—என்ன யோசனை?

**கப்பித்தான்:**—"நீ செல்வராயர் வீட்டில் இரண்டு மூன்றுநாள் தங்கியிருந்ததால் அவ்வீட்டின் உட்புற அமைப்பனைத்தும் நன்றாய் உனக்குத் தெரியும். ஆகையால் நடு இரவில் என்னையும் என் ஆட்களில் ஐந்தாறு பெயர்களையும் இரகசியமாய் அவ்வீட்டிற்குள் கொண்டுபோய்விட்டால்...அவ்வளவே நீ செய்யவேண்டிய உதவி" என்றான்.

இதைக்கேட்டதே நமது அம்பலவாணனுக்கு மிக்க கோபம்வந்தது. அதை முழுதும் அடக்கமுடியாமல் கப்பித்தானைநோக்கி, "அப்படியானால் நீங்கள் யோக்கியமான வர்த்தகர்களாயிராமல் கொள்ளைக்காரராகவும் திருடராகவும் மாறிவிட்டாற்போலிருக்கிறது" என்றான்.

**கப்பித்தான்:**—"எப்படி மாறவேண்டிவரினும் மாறுவதே. செல்வராயர்வீட்டில் ஏராளமான பொருளும் பொன் வெள்ளிசாமான்களும் இருக்கின்றன. நீ யுதவிசெய்தால் உனக்கும் பங்கு அகப்படும்" என்றான்.

**வாலிபன்:**—"நான் சம்மதிக்காவிட்டாலோ?" என்றான்.

**கப்பித்தான்:**—"சம்மதியாவிட்டால் பன்னிரண்டுமணிநேரத்திற்குள் சிறையாய்த் துரைத்தனத்தாரிடம் ஒப்புவிக்கப்படுவாய்" என்றான்.

நமது அம்பலவாணன் சற்றுநேரம் சிந்தித்து, "சரி. எனக்குத்தப்ப வேறு வழியில்லை. ஆகையால் சம்மதிக்க வேண்டியதே" என்றான்.

கப்பித்தான், "நல்ல தீர்மானம்செய்தாய். ஆனால் ஏதாவது சதிசெய்ய நினைத்தாயோ தட்சணம் உன் சிரம் பூமியில் விழுந்துவிடும் பத்திரம்" என்றான்.

வாலிபன் "அது எனக்குத்தெரியும். என்சுயநலத்தைக்கருதியே நான் இதற்குச் சம்மதித்தேன். இனி நாம் மேல்தட்டிற்குச் செல்வோம்" என்றான்.

**கப்பித்தான்:**—அப்படியல்ல. உனக்கு வேண்டிய ஆகாரம் முதலியயாவும் இங்கே ஆயத்தமாகவே யிருக்கிறது. பிரயாணிகளனைவரும் கரையிறங்குமட்டும் நீ யிங்கேயே யிருக்கவேண்டும்.

**வாலிபன்:**—அப்படியானால் நீ யென்னை நம்பவில்லை.

**கப்பித்தான்:**—அப்படியல்ல நான் எதிலும் ஜாக்கிரதையா யிருப்பதுவழக்கம்.

இந்த சந்தர்ப்பத்தில்மட்டும் நீ சரியாய் நடந்துகொண்டால் பிறகு எல்லாம் சரிப்பட்டுப்போம்.

வாலிபன்:—" சரிசரி. உன்பிரியம்போல்செய் " என்முன்.

கப்பித்தான் அறையைப் பூட்டிக்கொண்டு மேல்தட்டிற்குச்சென்முன். பிரயாணிகளனைவரும் கரையிறங்கத் தொடங்கினார்கள்.

அன்றிரவு சுமார் பதினொருமணியிருக்கும். அப்போது "இராஜமாளிகை" என்னும் கப்பலிலிருந்து ஐந்துபேர் கரையிறங்கினார்கள். அவர்கள் நமது அம்பலவாணன் அல்லது காப்டென் அமிர்தலிங் என்பவனும், கப்பித்தானாகிய தேவதத்தனும் அவன் மகன்பலராமனும், பலம்பொருந்திய வேறிரண்டு மாலுமிகளுமே. இவர்கள் இரத்னபுரிநகரின் ஓரத்திலுள்ள ஜனசஞ்சாரமில்லாப் பாதைகளின் வழியாகவே சென்றார்கள். இவர்கள் கப்பலைவிட்டிறங்கி சுமார் ஒருமணிநேரம் நடந்தபோது, 'நிலவு வெளிச்சத்தால் சற்று தூரத்தில் கற்கோட்டையென்னும் மாளிகையின் சிகரங்களைக்கண்டார்கள்.

அம்பலவாணன், " அதோ தெரிகிறதே அந்தக்கட்டிடந்தான் " என்முன். கப்பித்தான், " நல்லதாயிற்று. சதிசெய்ய நினைத்தால் என்ன நடக்குமென்பதைப்பற்றி நான் மறுபடி எச்சரிக்கை செய்ய வேண்டியது அனாவசியமென்றே நினைக்கிறேன் அந்த மாளிகையில் ஸர்தார் செல்வராயர் விலை மதிப்புள்ள சொத்துக்களையெல்லாம் வைத்திருக்கிற அறைக்கே நேராய் அழைத்துச் செல்வதாய்க் கூறினையல்லவா ? " என்முன்.

வாலிபன்:—" ஆம். அப்படித்தான் கூறினேன். அதே அறையில்தான் நான் ஒளித்துவைக்கப்பட்டிருந்தது " என்முன்.

இவர்களனைவரும் அக்கட்டிடத்தினருகிற் சென்றதும் தாங்கள் கையிற் கொண்டுவந்திருந்த நூலேணியால் துரிதமாய்க் கட்டிடத்தைச் சூழ்ந்துள்ள மதிற்சுவரின்மேலேறி உள்ளேயிருக்கும் தோட்டத்தில் இறங்கினார்கள். இவர்களைக் கண்டதே இரண்டு நாய்களும் குலைக்கத் தொடங்கின. ஆனல் கப்பித்தான் அதற்கு முன்யோசனையோடு தான்கொண்டுவந்திருந்த மாமிசத்துண்டுகளை அவற்றின்முன் எறிந்தான். அந்தோ! அம்மாமிசமே அந்த நாய்களின் கடைசியுணவாய் முடிந்தது. ஏனெனில் அதில் பாஷாணம் கலந்திருந்ததால் அதைத் தின்றவுடனே அவை யிரண்டும் உயிர் துறந்தன.

அம்பலவாணன் அங்கிருந்த ஒருசாளரத்தைக் கப்பித்தானுக்குக்காட்டி, " இதோ இதின்வழியாய்ச் சென்றால் பொக்கிஷம் இருக்கும் அறைக்குச் செல்லலாம் " என்முன்.

கப்பித்தான், " நல்லது. நான் முன்னே ஏறிச்செல்கிறேன். என் பின்னால் இந்த மாலுமிவரட்டும். பிறகு நீ வா. உன்பின்னல் பலராமனும் மற்றொரு மாலுமியும் வரட்டும் " என்முன். அதன்படியே இவர்கள் ஐந்துபேரும் சாளரத்தின்வழியாய் உள்ளிறங்கி இருபக்கச்சுவர்களிலும் பலகை தைத்திருக்கும் சந்துபோன்ற வழியில் நுழைந்தார்கள். அம்பலவாணன் ஏதாவது துரோகம் செய்வதாய்த் தெரிந்தால் தட்சணம் அவனைக்கொன்று விடுவதாக யாவரும் தங்கள் சேபிகளிலிருக்கும் கைத்துப்பாக்கிகளின் கைப்பிடிகளைத் தொட்டவண்ணமாகவே நடந்தார்கள். பலகைச் சுவரின் ஒரு விடத்தில் சென்றதே அம்பலவாணன் அங்குநின்று, "இதோ இந்தவிடத்தில்தான் பொக்கிஷ அறையிருக்கிறது" என்று கூறிக்கொண்டே அங்கிருந்த இரகசியமறையைத் தொட்டான். உடனே கள்ளக்கதவுதிறந்தது. மேலிருந்த ஒரு சிறு சாளரத்தின் வழியாய்ச் சந்திரனுடைய பிரகாசம் உள்ளே பிரவேசித்திருந்ததால் உள்ளிருந்த அறை நன்றாய்த் தெரிந்தது. (தொடரும்)

# " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

## நள௵ மாசி௴ சாலிவாகன 1838, கலியுகாதி 5017,

## பசலி 1325-26, கொல்லம் 1091-92,

## இங்கிலீஷ் 1917-ம்௵ பிப்ரவரி—மார்ச்௴

| பிப்ரவரி௴ | மாசி௴ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 12 | 1 | தி | பஞ்-23-38 | சித்-51-38 | சித் 52 அ | டோலாரோகணம் |
| 13 | 2 | செ | சஷ்-23-33 | சுவா-52-29 | அமி 53 ம | வைத்தியசாஸ்திரம் கற்பிக்க |
| 14 | 3 | புத | சப்-21-39 | விசா-52-5 | சித்த 60 | 3-க்குள் மழை |
| 15 | 4 | வி | அஷ்-19-40 | அனு-50-42 | சித்த 60 | பகல் 11½-க்கு மேல் 1-க்குள் ரிஷபம் வாழைமாநட. |
| 16 | 5 | வெ | நவ-16-5 | கேட்-48-21 | மா 48 அ | சூளைபோட |
| 17 | 6 | ச | தச-11-48 | மூல-45-17 | சித்த 60 | ருதுசாந்தி செய்ய |
| 18 | 7 | ஞா | ஏகா-6-44 | பூரா-41-41 | சி 42 அமி | பவழம் வாங்க |
| 19 | 8 | தி | துவா-1-7 | திர-54-11 | மா 54 அ | பூ முடிக்க |
| 20 | 9 | செ | திர-49-39 | திரு-33-40 | சித்த 60 | தானியம் கட்டுகட்டிவைக்க |
| 21 | 10 | புத | ●அமா 43-44 | அவி-26-6 | மா 20 சித் | **அமாவாசை விரதம்** |
| 22 | 11 | வி | பிர-38-19 | சதை-25-50 | மா 26 சித் | சமஸ்தாபரணம் தரிக்க |
| 23 | 12 | வெ | துதி-33-20 | பூர-22-30 | சித்த 60 | நவவஸ்திரதாரணம் |
| 24 | 13 | ச | திரி-28-46 | உத்-20-2 | சித் 20 மா | புது அடுப்பில் தீயிட |
| 25 | 14 | ஞா | சது-25-35 | ரேவ-19-4 | அமி 19 சி | ருதுசாந்தி செய்ய |
| 26 | 15 | தி | பஞ்-23-12 | அசு-18-55 | சித்த 60 | **சஷ்டி விரதம்** |
| 27 | 16 | செ | சஷ்-21-55 | பர-17-8 | சித் 17 அ | **கிருத்திகைவிரதம்** |
| 28 | 17 | புத | சப்-21-50 | *கார்-18-31 | அமி 19 சி | புது வியாபாரம் செய்ய |
| மார்ச்௴ | | | | | | |
| 1 | 18 | வி | அஷ்-23-11 | ரோக-21-3 | மா 21 சித் | பூமுடித்தல் |
| 2 | 19 | வெ | நவ-25-41 | மிரு-25-7 | சித்த 60 | 7-க்குள் மழை |
| 3 | 20 | ச | தச-29-14 | திரு-29-57 | சித்த 60 | சூளையில் நெருப்புவைக்க |
| 4 | 21 | ஞா | ஏகா-33-50 | புன-35-45 | சித்த 60 | புதுவுரல் புழங்க |
| 5 | 22 | தி | துவா-38-50 | பூச-41-55 | சித்த 60 | நாமகரணம் |
| 6 | 23 | செ | திர-44-3 | ஆயி48-28 | சித்த 60 | ஜபம் பூர்த்திசெய்ய |
| 7 | 24 | புத | சது-49-11 | மக-54-42 | சித் 55 அ | 4-க்குள் மழை |
| 8 | 25 | வி | ○பௌள53-35 | பூர-60-0 | சித்த 60 | சித்திரமெழுத |
| 9 | 26 | வெ | பிர-57-5 | பூர-0-8 | சித்த 60 | சமஸ்தாபரணம் தரிக்க |
| 10 | 27 | ச | துதி-60-0 | உத்-4-57 | மா 60 | |
| 11 | 28 | ஞா | திரி-0-0 | அஸ்-8-32 | அமி 9 சித் | ஆபரணம் தரிக்க |
| 12 | 29 | தி | திரி-0-31 | சித்-12-22 | சித் 12 அ | புதுதானியம் வாங்க |
| 13 | 30 | செ | சது-0-22<br>பஞ்-58-38 | சுவா-12-2 | சித் 12 மா | கிருஷிசெய்ய |

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS